ஸ்ரீ தந்வந்தரயே நம:

வைத்ய சந்த்ரிகை.

தொகுதி 16 Vol. 16	ஜய - வைகாசி May, 1954.	பகுதி 5 No. 5

பக்கம்

அப்யுதய கேந்த்ரம் ... 3

ஆரோக்யாம்ருதம் ... ,,

ஔஷத குணம்:—

த்ரிபுவனகீர்த்திரஸம் ... 5

கனகஸுந்தரரஸம் ... 7

சொல்வது ஒன்று; செய்வது வேறு ... 9

வெங்கட்ரமண கலாசாலை உபந்யாஸம் ... 10

பால சிகித்ஸை—ஆரோக்ய கல்பத்ருமம்... 17

வைத்யச் செய்திகள் ... 22

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல நியமாவளி (தனி) 1—12

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்

மண்டல சம்பந்தமான எல்லாவித காரியங்களுக்கும் தலைவருக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

தலைவர் T. V. ராதாகிருஷ்ண சாஸ்த்ரீ M. A., L. I. M.
23. சிங்காரிநாயக்கன் தெரு, மந்தை வெளி, மைலாப்பூர் மதராஸ்.—4.

சந்தா அனுப்பவும், மற்ற நிர்வாஹ விஷயங்களுக்கும் விலாஸம்:

ஸ்ரீ. S. V. ராதாகிருஷ்ண சாஸ்த்ரீ.
பொதுக் கார்யதர்சீ, தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்,
27, சின்னக்கடைத்தெரு, தெப்பக்குளம் போஸ்டு,
திருச்சிராப்பள்ளி.

பண்டிட் ஸ்ரீ. S. M. ஸுந்தரராஜாசார்யர்,
ஆசிரியர்—"வைத்ய சந்த்ரிகா" ஸ்ரீரங்கம்.

என்ற விலாஸத்திற்கு பத்திரிகையில் பிரசுரம் செய்யவேண்டிய ஸகல விஷயங்களையும் பற்றி எழுத வேண்டும்.

आयुरागमरहस्यबोधिनी दीर्घजीवितविशेषदायिनी ।
द्राविडीयपृथुमण्डलादियं शश्वदुद्भवति वैद्यचन्द्रिका ॥

நமது மஹாமண்டலத்தலைவர் ஸ்ரீ. T. V. ராதாகிருஷ்ண சாஸ்த்ரிகள் சென்ற இதழில் அப்யுதய கேந்த்ரம் அமைக்கும் விதம், லக்ஷ்யம், முதலிய எல்லாவிஷயங்களையும் தெளிவாகத் தெரிவித்திருந்ததை எல்லா அன்பர்களும் வாசித்திருக்கலாம். நமது தலைவர் தனது லக்ஷ்யத்தைச் சொல்லிலும் செயலிலும் ஒரே மாதிரி காண்பிப்பவராகையால் அவர் இயற்கைப்படியே 23—4—54 ல் சென்னையிலும், 24—4—54 ல் கும்பகோணத்திலும், 25—4—54 ல் திருச்சியிலும் அப்யுதய கேந்த்ரத்தை ஆரம்பித்து வைத்தார்கள். மற்ற வைத்யர்களும் வைத்ய அபிமானிகளும் மிகுந்த உத்ஸாஹத்தைக் காட்டினர்கள். விளையும் பயிர் முளையிலேயே தெரிவது போல ஆரம்பத்தில் காட்டிய உத்ஸாஹம் மேன்மேலும் வளர்ந்து வருமென்பதில் சிறிதும் ஸந்தேஹமில்லை.

மேலும், இவ்வப்யுதய கேந்த்ரத்தை நமது நண்பர்கள் எவ்வளவுக்கெவ்வளவு அபிவிருத்திசெய்கிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு நமது லக்ஷ்யம் பரிபூர்ண ஸித்தியை அடையும். இதனால் நிச்சயமாக ஆயுர்வேத ஸாம்ராஜ்யம் ஒன்று நமக்குக்கிட்டும். நாம் பிறர் கையை எதிர்பார்க்க வேண்டியதில்லை. நமது விஞ்ஞானம் ஒப்பற்ற தனிச்சிறப்பைப் பெறும். இதைப் பற்றி தலைவர் மிக விரிவாகத் தெரிவித்திருப்பதால் அதையே மீண்டும் தெரிவிக்கவேண்டிய அவசியமில்லை.

ஒவ்வொருவரும் தமது ஸ்தானத்தில் பிரசாரத்துக்கான விளம்பரங்களைத் தொங்கவிடுங்கள். லக்ஷ்யங்களை ஜனங்களிடை

யே பரப்பப்பாடுபடுங்கள். நமது தலைவரை உத்ஸாஹப்படுத்துங்கள். இதற்காக தனியே சிரமப்படவேண்டியதில்லை. நெல் செய்ய புல் தேயுமாப் போலே நாம் நற்காரியத்தைச் செய்து கொண்டே வரின் தானே இடையூறுகள்போகும். இதை உத்தேசித்து மண்டலம் அநேக காரியங்களைச் செய்யத் திட்டமிட்டிருக்கிறது,

ஆரோக்யாம்ருதம் :

முதற்படியாக வைத்ய சந்த்ரிகையின் அனுபந்தமாகவும் தனிப்பிரதிகளாகவும் ஆரோக்யாம்ருதம் என்ற தலைப்பின் கீழ் பொதுஜனங்களுக்கு உபகாரகமாக ஒரு வெளியீடு வரவிருக்கிறது. நண்பர்கள் அவரவர்களின் கேந்த்ரத்தில் எவ்வளவு பிரதிகளைச் செலவழிக்க இயலுமோ அவ்வளவு பிரதிகளை அனுப்புமாறு முன்னதாகவே பொதுக்கார்யதரிசிக்கு எழுதினுல் அவர் அனுப்புவர். இக்கைங்கர்யத்தில் அனைவரும் பங்கெடுத்துக் கொள்ளவேண்டியது மிக அவசியமென மீண்டும் நாம் தெரிவிக்க வேண்டியதில்லை.

வைத்ய சந்த்ரிகை- விஷயங்கள் :

சந்த்ரிகையில் பல தலைப்பின் கீழ் பல விஷயங்களை பிரசுரிப்பது பற்றிச் சென்ற இதழில் காட்டப்பட்டதல்லவா? அவ்விருப்பத்திற்கிணங்க பாலரோகசிகித்ஸை, ஔஷதகுணம் என்கிற இரண்டு தலைப்புகள் இம்மாதம் வெளியாகின்றன. மேலும் அடுத்தமாதத்தில் நிதானசிகித்ஸை, ஔஷதகல்பம்-என்றதலைப்பில் விஷயங்கள் வெளிவரவிருக்கின்றன. இவைகளெல்லாம் அன்பர்களுக்கு அதிகம் உபகாரமளிப்பவைகளாகவிருக்கும் என்பதை அனுபவத்தில் அறியலாம். நண்பர்கள் ஆதரவைப் பொறுத்து நமலும் நமது உத்தேசத்தை விரிவுபடுத்தவேண்டியிருப்பதால், தற்காலம் குறைந்தபக்ஷம் ஒவ்வொருவரும் ஐந்து நண்பர்களை அங்கத்தினர்களாக்கி அபிவிருத்தி செய்வதுடன், தலைவரையும் உத்ஸாஹப்படுத்த வேண்டுகிறோம்.

ஸ்ரீரங்கம் ஸ்ரீ லக்ஷ்மீ ப்ரஸந்ந வெங்கடேச ஆயுர்வேத தர்ம வைத்யசாலையில் ஏப்ரில் மாதத்தில் சிகிச்சை பெற்றவர்கள்.

ஆண்கள்	1538	4328
பெண்கள்	1496	
சிறுவர்	1294	

த்ரிபுவன கீர்த்தி ரஸம்.

இது யோகரத்னகரத்திலுள்ளது. ஜ்வரங்களுக்கான ஔஷதங்களில் இந்தியா வெங்கும் அதிகமாக உபயோகத்திலுள்ளது.

முறை :

சுத்தி செய்த லிங்கம், சுத்திசெய்த வத்ஸநாபி, சுக்கு, மிளகு, திப்பிலி, பொரித்த வெங்காரம், கண்டதிப்பிலி இவை வகைக்கு சம எடை எடுத்து நன்கு தூள் செய்து துணியில் வடிகட்டிப் பிறகு கல்வத்திலிட்டு துளஸி, இஞ்சி, கரு ஊமத்தை இலை இவைகளின் சாற்றில் ஒவ்வொன்றிலும் 3—3 நாள் ஊரவைத்து அரைத்து 2 யவ அளவில் மாத்திரைகள் உருட்டிக் கொள்ளவும். நிழலில் உலர்த்தவும்.

அளவும் அனுபானமும் ;

ஒவ்வொரு மாத்திரை தினமும் மூன்று நான்கு வேளை தேவைக்கேற்ப இஞ்சிச்சாறும் தேனும் சேர்த்து அல்லது துளஸிச்சாற்றுடன் அல்லது வில்வ இலை கொதி கஷாயத்துடன் அல்லது ஏதாவது ஜ்வரஹர கஷாயத்துடன் கொடுக்கவும்.

குணம் :

உஷ்ண வீர்ய முள்ளது. எல்லா ஜ்வரங்களிலும், விசேஷமாக வாதத்தாலும் கபத்தாலும் ஏற்பட்ட ஜ்வரங்களில் ஜ்வரத்தைத் தணிக்கக்கொடுக்கக் கூடியது. மற்ற வாத கப நோய்களிலும் தேவைக் கேற்பக் கொடுக்கக் கூடியதே. ஜ்வரத்தின் வேகத்தைக் (தாபத்தை) குறைத்து, ஹ்ருதய நாடித் துடிப்புகளையும் குறைத்து வியர்வையை உண்டாக்கி ஜ்வரத்தைக் குறைக்கும். பித்த சரீரத்தில் இதை அதிக அளவில் கொடுப்பது உசிதமல்ல. மிகவும் அவசியமேற்படின் ஹ்ருதயத்திற்குப் பலமளிப்பதும், குளிர்ச்சிதரக் கூடியதுமான பவளபிஷ்டி, அப்ரகபஸ்மம், சீந்தில்

1. இவ்வதிகாரத்தில் பல முக்கிய ஔஷதங்களின் குணங்களும் உபயோக முறைகளும் ஆராயப்பட்டு விரிவாகக் கொடுக்கப்படும். வாசகர்கள் தங்களுக்குத் தேவையான வேறு முறைகளின் செய்முறை உபயோக விதி முதலியவைகளைப்பற்றித் தெரிந்து கொள்ள விரும்பினால் அதைப்பற்றி ஆசிரியருக்கு எழுதவும். —ஆசிரியர்.

சத்து, முத்துசிப்பி பிஷ்டி, இவைகளுடன் சேர்த்துக் கொடுப்பது நல்லது.

இதில் சுத்த வத்ஸநாபி சேர்க்கப்படுவதால் நாடித் துடிப்பை சீர்படுத்துவதில் இதற்கு விசேஷ சக்தி உண்டு. அதனுல் நாடித் துடிப்பு மிகவும் மெலிந்திருக்கும் சமயம் இதை ஜாக்ரதையுடன் கொடுக்கவேண்டும். வத்ஸநாபியினுல் தனித்து ஏற்படும் நாடி பல வீனத்தை மாற்றவே திரிகடு கண்டதிப்பிலி துளஸி முதலியவை சேர்க்கப்பட்டுள்ளதெனினும், வத்ஸ நாபியின் தனித் தன்மை சுத்தமாகப் போகாது. மேலும் வத்ஸநாபியின் அச்சக்தியே தான் ஜ்வரத்தைக் குறைக்க உதவுகிறது. அதனுல் நாடி மெலிந்திருக்கும் சமயத்தில் இதை அதிக அளவில் உபயோகிக்காமலிருப்பது நலம். மிகச்சிறிய அளவில் வத்ஸநாபியே நாடித் துடிப்பைச் சீர்படுத்தும். இதன் சக்தி ஹ்ருதயம், மூத்திராசயம், தோல் இவைகளைத்தூண்டி மூத்திரம் வியர்வை வழியாக சரீரதாபத்தை வெளிப்படுத்தி ஜ்வரத்தைத் தணிக்கின்றது. ஹ்ருதயம் ச்வாஸாசயம் இவைகளின் கதியின் வேகமும் சமனமடைகின்றது.

உபயோகம் :

நவஜ்வரத்தில் அஜீர்ண (ஆம) தோஷம் குறைக்கப்பட்டதும் ஜ்வரம் குறைய இதைக் கொடுக்கலாம். நவஜ்வரத்தில் ஏற்படும் சிலசமயம் நாடி அதிகமாக துடித்தலும், சில சமயத்தில் மந்தித்துத் துடித்தலும், ஆனுல் ஒருசமயம் பலமாக காணுவதுமாக நாடியில் ஏற்படும் கதி மாறுதல்கள், தலைவலி, உடல் நடுக்கம், நீர் கோர்த்துக் கொள்வதால் தும்முதல், முதுகு மார்பில் வலி, நடந்தால் இவ்வலி அதிகமாகக் காணுதல், சூடாக பதார்த்தத்தைச் சாப்பிட விருப்பம், நாக்கின் ருசி கெடுதல், வரட்டு இருமல், தொண்டையில் வலி, தொண்டையிலுள்ள கிரந்திகள் வீங்கி முழுங்கமுடியாமலிருத்தல், பூட்டுகளில் வலி, இவ்வுபத்திரவங்களில் த்ரிபுவனகீர்த்தி நல்ல குணத்தை உடனே அளிக்கின்றது.

கபப்ரதான ஜ்வரத்தில் :

குறைந்த ஜ்வரவேகம், அசதி, சோர்வு, அதிகத் தூக்கம், சிறிது சிறிது வலி, மெல்லிய கபம் வாயாலும் மூக்காலும் வெளி

வருதல், கைகால் குடைச்சல், பிடரியில் வலி முதலிய குறிகள் ஜ்வரத்தில் காணப்படின் இதைக்கொடுக்க கபதோஷத்தைப் போக்கி அதன் உபத்ரவங்களைத் தணிக்கின்றது.

ச்வஸனகம் என்ற நிமோனியா ஜ்வரத்திலும், அப்ரக பஸ்மம், சிருங்கபஸ்மம், சந்திராமிருதரஸம் இவை சேர்த்துக் கொடுக்க நல்ல குணமளிக்கின்றது.

பித்தம் பிரதானமான டைபாய்டு முதலிய ஜ்வரங்களில் பிரவாள பஸ்மம், (சந்திர புட) சீந்திற் சத்து சேர்த்துக் கொடுக்க பித்தத்தின் கொடுமை குறைகின்றது. இன்ப்ளுயன்ஸா ஜ்வரத்திலும் பித்தத்தின் குறியான பதட்டம், எரிச்சல் முதலியவை இல்லாமல், கபத்தின் குறிகளான உடல் முழுவதும் சிறுவலி, கணுக்களிலும் வலி, வரண்டசளி, இருமல், தொண்டைவலி, ச்வாஸாசயத்தைச் சுற்றிலும் வீக்கம் இவைகளிருந்தால் நல்ல குணம் அளிக்கின்றது.

வைஸூரியிலும், கொப்புளங்கள் வெளிவராமல் அதன் விஷாம்சம் உள்ளேயே பரவிக் கொண்டு மிகத் தொந்தரவளிக்கும் சமயத்தில்—கண்களில் நீர் ததும்புதல், தலைகனம், சளி, ஜ்வரம், அனத்தல், புரட்டல் முதலியவை இருக்கும்பொழுது கொப்புளத்தை வெளிப்படுத்தி கபதோஷத்தை வெளிப்படுத்துவதால் உபத்ரவங்கள் குறைகின்றன.

இதில் சேர்ந்துள்ள திரவ்யங்களின் குணம்: லிங்கம்—கபதோஷத்தை மாற்றி கபத்தை வெளிக் கொணருகின்றது. ஜ்வரத்தையும் தணிக்கின்றது. வத்ஸநாபி, ஜ்வரஹரம். வியர்வையை உண்டாக்கும். திப்பிலி, கண்டதிப்பிலி, சுக்கு, மிளகு நல்ல தீபனம், பாசனம். துளஸீ—வியர்வையை உண்டாக்கும், தீபனம், பாசனம். கருஊமத்தை—வலிப்பு, கபம், வயிற்றிலுள்ள கெட்டவாயு இவைகளை அகற்றும். ஜ்வரத்தைக் குறைக்கும்.

கனகஸுந்தர ரஸம்.

இம்முறை ரஸேந்திரஸார ஸங்கிரஹத்திலுள்ளது.

முறை: சுத்த கந்தகம், சுத்தலிங்கம், பொரித்த வெங்காரம் சுத்த வத்ஸநாபி, மிளகு, திப்பிலி, சுத்திசெய்த கரு ஊமத்தை விதை, இவைகளை ஸமனெடை சேர்த்துத் தூள் செய்து துணியில்

வடிகட்டிக் கல்வத்திலிட்டு கஞ்சாஇலைச் சாற்றால் ஒரு யாமம் அரைத்து 2 யவ அளவில் மாத்திரை உருட்டி நிழலில் உலர்த்தி எடுத்துக் கொள்ளவும்.

அளவும் அனுபானமும் :

1—2 மாத்திரைகள் ஒருநாளில் இரண்டு வேளை சுத்த ஜலம், மோர்த்தெளிவு, சோம்புத்தீ நீர் இவைகளுடன் கொடுக்கவும்.

குணமும் உபயோகமும் :

அதிஸாரம், கிரகணீ, ஜ்வராதிஸாரம் இவைகளில் நல்ல குண மளிக்கின்றது. சிசுக்களுக்கு பல் முளைக்கும் சமயத்தில் ஏற்படும் வயிற்றுப் போக்கிற்கு மிகவும் ஏற்றது. ஜீர்ணசக்தியை அதிகப் படுத்தும். வேதனைகளைக் குறைக்கும். உஷ்ண வீர்ய முள்ளதான தால் பித்த பிரதானமான ரோகங்களில் தகுந்த அனுபானத் துடனும் கூட்டு மருந்துடனும் கொடுப்பது நல்லது. கிரகணியிலும் அதிஸாரத்திலும் அஜீர்ண தோஷமில்லாவிடில் நல்ல குணமளிக் கும். பாசக பித்தத்தைத் தகுந்த அளவில் அதிகப்படுத்தி சீர்படுத்துகின்றது.

சிறு குழந்தைகளுக்குப் பல் முளைக்கும் சமயத்தில் வயிற்றுப் போக்கு ஏற்படும். வாயுவின் தோஷமும் ஏற்பட்டால் குழந்தை மிகவும் சிரமப்படும். ஆஹாரம் ஜீர்ணமாகாமலும் பால் முதலியவை முறிந்து கக்கலும் கரைசலுமாக வெளிப்படும். மஞ்சள் நிறத்தில் மலம் மிக திரவமாக இருக்கும். குழந்தை பிரதிதினம் இளைக்கும். பிடிவாதம் பொறுமை கடுகடுப்பு முதலியவை அதிகமாக இருக் கும். அதிகநேரம் ஓரிடத்தில் இருக்கப் பிடிக்காமலும் எப்பொழு தும் அழுதுகொண்டே இருக்கும். அடிக்கடி பல்லீறுகளை கடித் துக்கொண்டே இருக்கும். தூக்கம் குறையும். கண்ணிமை வீங்கி சிறிது காய்ச்சலும் இருக்கும். இந்நிலையில் கனக சுந்தர ரஸத்தை தேனில் கலந்து கொடுக்க வாதத்தினால் ஏற்படும் தூக்கமின்மை, வேதனை, வயிற்றுப்போக்கு, படபடப்பு கடுகடுப்பு பிடிவாதம் முத லியவை குறைந்து குழந்தை தெளிந்து சுகமாக இருக்கும்.

அஜீர்ணம், சீதம் ரத்தம் கலந்த அதிசாரத்திலும் பிரவாஹி கையிலும் கிரஹணியிலும் ஓரிரண்டு நாள் லங்கனமிருந்த பிறகு இதை உபயோகிக்கவேண்டும். வயிற்றுப் போக்கை ஸ்தம்பனம்

செய்யும் அபின் சேர்ந்த மருந்துகள் கொடுக்கக்கூடாத நிலையில் கனக சுந்தர ரஸம் நன்கு குணமளிக்கின்றது. அடிக்கடி அஜீர்ண மாகவும் சிறிது சீதமும் (கபம்) ரத்தமும் கலந்த வயிற்றுப்போக்கு, பேதியாகும் போது வயிற்றில் பிசைவது போன்ற வலி- இந் நிலைகளில் அபின் சேர்ந்த மருந்துகள் கொடுப்பதால், அபின் ஸ்தம் பனமானதால், குடலின் தசைகள் சுருங்கி, கெட்ட சீதமும் ரத்த தமும் வெளிப்படாமல், கெட்ட மலமும் வெளிப்படாமல் வியாதி வேறு வகையில் கெடுதியை விளைவிக்கின்றது. இந்நிலையில் கநக ஸுந்தர ரஸம் வாயுவையும் தணித்து வலியையும் குறைப்பதால் மிகவும் உதவுகின்றது. இந்நிலையில் அனுபானமாகவும் கூட்டு மருந்தாகவும் பிஞ்சுக்கடுக்காய்த்தூள், அபயாதிஷ்ட்கம், இஸப் கோல்விதை ஜலம், சோம்புத் தீநீர் இவை நன்கு உதவுகின்றன.

மலம் சிறிதளவில் நுரைத்தும் சீதம் கலந்தும் அடிக்கடியும் வெளிப்படும் வாதாதிஸாரத்தில் குடலிலுள்ள ச்லேஷ்மகலை (ஜவ்வு) களிருந்தும் வெளிப்பட்டும் கபஸ்ராவத்தையும் வலியையும் குறைக்க இது மிகவும் உதவுகின்றது. இதிலுள்ள கருஊமத்தை விதையும் கஞ்சா இலை ஸ்வரஸமும் வாதத்தின் வேகத்தைக் குறைத்தும் ஜவ்வுகளில் ஏற்படும் கபஸ்ராவத்தைக் குறைத்தும் உதவுகின்றன.

ஆஹாரம் ஜீர்ணமாகாமல், சாப்பிட்டவுடனேயே மலப்போக்கு திரவமாகவோ கெட்டியாகவோ வெளிப்படும் போதும், குடலும் இரைப்பையும் ஆஹாரத்தை ஜீர்ணிக்க சக்தியற்றிருக்கும் நிலை யிலும் இது நல்ல குணமளிக்கின்றது.

சொல்வது ஒன்று ; செய்வது வேறு !

'சிறிய கால அளவிலேயே வைத்யத்தைக் கற்று வைத்யர் களாக வெளிவரும் ஹோமியோபதிக் வைத்யர்களை நான் தகுந்த வர்களாகக் கருதமுடியாது—' **ராஜ்குமாரி அமிருத்கௌர்.**

— அதேமூச்சில், வைத்ய உதவியாளர் என்ற பெயரில் (Auxiliary Personnel) **புதிதான திரிசங்குகள் ஒன்றரை வருஷப் பயிற்சியுடன் வைத்யத் தொழில் நடத்தத் திட்டத்தை சர்க்கார் ஏற்றுள்ளது.**

ஸ்ரீ:

ஸ்ரீ வெங்கடரமண ஆயுர்வேத கலாசாலை ஸ்தாபகர் தின விழாவில் நடந்த

திருச்சி வைத்யவிசாரத, ஆயுர்வேதசிரோமணி ஸ்ரீ S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரிகளின்

உபந்யாஸச் சுருக்கம்.

எங்களது வித்யாஸ்தானமாகிய வெங்கடரமண ஆயுர்வேத கலா சாலையின் ஸ்தாபகர் தின விழாவில் பங்கெடுத்துக்கொள்ள எனக்குக் கிடைத்த இவ்வாய்ப்பை என் வாழ்வில் நான் அடைய விரும்பிய சிறந்த பாக்கியமாகக் கருதிப் பெருமித மடைகிறேன். சென்ற பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் எனக்கு இக் கலாசாலையிலும் வைத்ய சாலையிலும் ஆயுர்வேதம் பயிலும் பாக்கியம் கிட்டியது. அக்காலத்தில் எனக்கு பிரதாணசார்யராக விருந்த காலஞ்சென்ற ஸ்ரீ நடேச சாஸ்திரிகள் அவர்கள் சமயம் வரும்போதெல்லாம் இக் கலாசாலை ஸ்தாபகரின் வாழ்க்கை வரலாற்றையும் இந்த ஸ்தாபனம் ஏற்பட்ட வரலாற்றையும் இதன் லக்ஷ்யங்களையும் அவைகளைக் கடைப்பிடிக்கச் சிறிதும் பின் வாங்காத நிர்வாஹிகளையும் பற்றி உணர்ச்சி யூட்டும் பல பிரஸ்தாபங்களை எங்களுக்கு வகுப்புகளில் கூறுவர். நமது கலாசாலை ஸ்தாபகரைப்பற்றி எனது ஆசார்யர் அவர்கள் வரைந்த குணசித்திரம் பசுமரத்தாணிபோல் பதிந்து இன்னமும் எனது மனதை ஆகர்ஷித்துக்கொண்டே இருக்கின்றது. அன்னாரின் மனோபலம், பரம்பரையாக வந்த தனிப்பட்ட இயல்புகள், ஸதாசாரச்சிறப்பு, அடிப்படையான நல்லியல்பு, நல்ல அதிகாரம், சிறந்த செல்வாக்கு, படபடப்பும் ஆவேசமும் வேகமும் நிறைந்த பேச்சு வன்மை. அதனுள் தெளிவாகும் ஆழ்ந்த தெளிந்த கருத்துகளும், நேர்மையான புத்திசாதுர்யமும், சிறிதும் தன்னலப்பற்றில்லாது தேச ஜனஹிதத்திற்கு உழைக்கும் தன்மை, தனக்குக் கிடைத்துள்ள பதவியையும் அதிகாரத்தையும் செல்வாக்கையும் நற்செயல்களுக்காகவே பூர்ணமாக உபயோகிக்கும் பற்றற்ற தன்மை, தைர்யம், லக்ஷ்மீகடாக்ஷம், உயர்ந்த கல்வி இவைகளைப் பெற்றிருப்பதால் ஏற்படும் களங்கமற்ற நிறைந்த குளிர்ந்த பார்வை, நண்பர்களிடத்தும் பந்துக்களிடத்தும் ஆச்ரயித்தோரிடத்தும் காட்டும் பரிவும் அபிமானமும் அன்பும், தன்னால் இது ஆகாது என நினைக்கவே மறுக்கத்தூண்டும் இச்சா- கிரியா சக்திகள், கல்வியைப் போல் அறிவும், அறிவைப்போல் கருணையும், அக்கருணை போலப் பல்வித ஊக்கங்கள் செய்யும் திறனும் 'ஒரு நிகரின்றிப் படைத்த வீரன்' என்ற பாரதியாரின் இனிய வாக்குக்குப் பொருளாகும் அற்

புத குண கணங்கள், गृहीत इव केशेषु मृत्युना धर्ममाचरेत् என்ற ஆன்றோரின் வாக்கியப்படி "தர்ம சிந்தை வருவதே கஷ்டம்; அப்படி வந்ததை நாளைக்கு எனத் தள்ளிப்போட்டால் நாளை வராமலேயே போய்விடலாம், ஆகையால் தர்மத்தைத் தோன்றியபோதே செய்வது உத்தமமென" உடனுக்குடன் பிறர் நினைப்பிற் கெட்டாதவாறு நன்கொடை வழங்குதல், எத்துறையிலும் பிறரைத் திணறவைக்கும் சிக்கலான காரியங்களில் துரிதமாக வழிகாணுதல், இந்தியாவின் புராதனப் பண்பாட்டிலும், அப்பண்பாட்டை ஆதர்சமாக வாழ்ந்து காட்டிய முன்னோர்களிடத்திலும் அபாரமான பக்தி, ஸம்ஸ்கிருதத்தில் விசேஷ பரிசயம், தமிழில் ஆழ்ந்த ஞானம்— என இவ்வாறு ஒவ்வொரு குணத்திலும் ஈடில்லாத அந்த மஹாபுருஷரின் நினைவு நமக்கு என்றென்றும் சிரேயஸ்ஸைக் கொடுக்கக்கூடியதே.

ஆயுர்வேதத்திலும் ஸம்ஸ்கிருதத்திலுமுள்ள தர்சனங்களிலுள்ள விசேஷப் பற்றுதல் காரணமாக அவைகளுக்குத் தகுந்த படிப்பு முறை ஏற்படுத்துவதின் அவசியத்தை அம்மஹான் 1902-ம் வருஷத்திலேயே உணர்ந்து, அக்காலத்தில் சர்க்கார் அது விஷயத்தில் சிரத்தை காட்டாதது பற்றி மிகக் கவலைகொண்டார். குரு குலப் படிப்பு முறையில் விசேஷமாக ஜனங்களுக்கு ஏற்படும் சிரத்தைக் குறைவும், அதனால் ஆயுர்வேதத்தின் சாஸ்திர பாகத்திற்கும் பிரயோகபாகத்திற்கும் சிறிது சிறிதாக பிரசாரக்குறைவும் ஏற்பட்டு வந்த காலமது. முக்கியமாக ஆயுர்வேதத்தின் சாஸ்திரப் பிரிவில் போதனை அளிக்கும் குருகுலமே அக்காலத்தில் கிடையாதெனலாம். பெரிய வைத்ய பரம்பரை வழிவந்த பிரஸித்த வைத்யர்கள் சிலர் மாத்திரம் சாஸ்திரத்திலும் பிரயோகத்திலும் தேர்ச்சி பெற்றவராயிருந்தனர். மற்றவர் அனேகமாக சிகித்ஸை முறைகளை மாத்திரம் அறிந்து தேர்ச்சி பெற்றிருந்தனர். இங்ஙனயில் க்ரமமாக சாஸ்திரப்பிரிவில் பயிற்சி நசித்து விடும் என்ற கவலை ஸ்ரீமான் அய்யர் அவர்களை மிகவும் வாட்டியது. இது பற்றித் தமது நண்பர்களுடன் ஆலோசித்துக் கொண்டு இருந்தபோதுதான் திடீரென ஒருநாள் ஆயுர்வேதத்தில் பூர்ணமாக பயிற்சி பெற உதவ ஒருகலாசாலையையும் வைத்யசாலையையும் தாமே தமது செலவில் ஆரம்பித்தாலென்ன என அவரது உதாரசித்தம் எண்ணிற்று. இச்சைக்கும் கிரியைக்கும் நடுவே அவர் என்றும் அதிக இடைவெளி கொடுத்தறியார். நல்ல காரியத்தை நினைத்தவுடனேயே நடத்தவேண்டும் என்ற ஆர்வம் அவரது முக்கியமான இயல்புகளில் ஒன்று. அவ்வுதார எண்ணமே பூஜ்ய நாமதேயரான அவரது தகப்பனாரின் பெயரைக் கொண்ட இவ்வேங்கடரமண ஆயுர்வேத வைத்யசாலையாகவும் கலாசாலையாகவும் உருப்பெற்றது, 1905-ம் வருடம் டிஸம்பர் 15 தேதியன்று. ஸ்ரீ சியாமளாவைத்யர் என திருவிசநல்லூர் வைத்ய பரம்பரையில்

மிகப் பிரஸித்தரான மஹான் முதல் வைத்யராக நியமிக்கப்பட்டார். பின்னர் கேரளத்தில் பிரஸித்த வைத்யரிடம் சாஸ்திரப்பயிற்சி பெற்ற ஸ்ரீமான் கிருஷ்ணவாரியர் அவர்கள் உதவிவைத்யராக நியமிக்கப்பட்டார். ஸ்ரீ சியாமளாவைத்யருக்குப் பிறகு இன்றுவரை கலாசாலை வைத்யசாலையின் தலைமை ஸ்தானத்தில் ஸ்ரீமான் வாரியர் அவர்களே இருந்துவருகிருர்கள்.

ஸ்ரீமான் அய்யர் அவர்கள் அவரது நட்பிற்குப் பூர்ண பாத்திரராயிருந்த பரோபகார சிந்தாமணி ஸ்ரீமான் ராவ்பகதூர் A. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்களிடம் இந்த ஸ்தாபனத்தின் நிர்வாஹத்தை ஒப்புவித்தார். "ஒருவர் தர்மம் செய்து விடலாம்; அது அவ்வளவு சிரமமன்று. மற்ருெருவர் அந்த தர்மத்தை மிகவும் பொறுப்புடன் இமைக்குள் வைத்துக் காப்பாற்றுவது அதைவிட மெச்சத்தக்கது" என்றவாறு பல அறிவாளிகளாற் போற்றப்பட்ட ஸ்ரீமான் A. கிருஷ்ணஸாமி அய்யர் அவர்களின் திறனும் பொறுப்புணர்ச்சியுமே இந்த ஸ்தாபனம் மேன்மேலும் வளர்ச்சிபெற உதவியது.

ஸம்ஸ்கிருதம் தமிழ் முதலிய நம் நாட்டு இலக்கியங்களில் எவ்வளவு அறிவாளிகளாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு ஆங்கில முறைப் படிப்பு பெற்ருேருடன் சம அந்தஸ்து கிடைப்பது அக்காலத்தில் அரிதாகத் தொடங்கியது. இதற்காகப் பல வருஷங்கள் அதிகாரவர்க்கத்திடம் தனது முழுச்செல்வாக்கையும் அந்தஸ்தையும் அதிகாரத்தையும் செலுத்தி மிகப்பாடுபட்டு ஸர்வ கலாசாலைப் பாடத்திட்டத்தில் ஸம்ஸ்கிருத தமிழ் இலக்கியப்படிப்புத் திட்டம் ஒன்று சேர்க்கப் பட்டு 1915 முதல் அப்பிரிவில் பரீக்ஷைகள் நடத்த ஏற்பாடு செய்தார்கள் நமது அய்யர் அவர்கள். பல்லாண்டுகளுக்குப் பிறகு 1928-ல் இந்த ஸ்தாபனத்தின் நிர்வாஹிகள் ஆயுர்வேதத்தையும் ஸர்வகலாசாலையின் கீழ் நாட்டைய படிப்புமுறைத் திட்டத்தினுள் கொண்டுவந்து சிரோமணி பரீக்ஷைக்குகந்த பாடதிட்டத்தை வகுத்தார்கள். அச்சிரோமணி பரீக்ஷைக்கே அன்றிலிருந்து இன்றுவரை இக்கலாசாலை மாணவர்கள் பயிற்சிபெறுகிருர்கள்.

இக்கலாசாலை ஆயுர்வேதத்தின், சாஸ்திரப் பிரிவிலும் பிரயோகப் பிரிவிலும் நல்ல பயிற்சியை மாணவர்களுக்கு அளித்துவருகிறது. பிரயோகப் பிரிவைக்காட்டிலும் சாஸ்திரப்பிரிவில் சற்று அதிகமாகவே கவனம் செலுத்தி வருகிறதெனக்கூடச் சொல்லலாம். அதற்குக் காரணம் ஒருவகையில் ஆயுர்வேத சிரோமணி பரீக்ஷையில் சாஸ்திரப் பகுதிக்குக் கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவம் காரணமாகலாம். இதைவிட முக்கியமான காரணமும் ஒன்று உண்டு. ஆயுர்வேதத்தின் ஸம்ரக்ஷணத்தில் நமது கலாசாலை ஆதியிலிருந்து கடைப்பிடித்து வரும் ஒரு முக்கிய லக்ஷ்யம் தான் அது.

அதாவது வைத்யர்களுக்குப் பயிற்சி யளித்து அனுப்புவதன் மூலம், பொது ஜனங்களுக்கு வைத்ய உதவி அளிக்க உதவுவது என்ற ஒரு நோக்குடன் மட்டும் ஆரம்பிக்கப்பட்டதல்ல இக் கலா சாலை. புராதன இந்திய நாகரீகத்தின் மேன்மைக்குக் காரணங்களாக விருந்த பல் பாரதீய கலைகளும் விக்ஞானங்களும் துர்தைவத்தால் பயிற்சியின்றி, இன்று கவைக்குதவாது பெயர் மாத்திரம் மிகுதியா யுள்ள நிலையிலிருக்கின்றன. ஆயுர்வேதம் மாத்திரம் ஜீவித மரணப் பிரச்னைக்கு உதவி அளிப்பதாலோ, அல்லது அதனது தனிப்பட்ட ஸ்திரத்தன்மையாலோ, எக்காரணத்தாலோ, அதன் விரிவு குன்றிய போதிலும் உயிரான அம்சங்கள் பாதுகாக்கப்பட்டு இன்றுள்ள சந்ததியாரின் கையில் கிட்டியுள்ளது. அது மறுபடியும் தனக்கு உரித்தான— முன் ஒருகாலத்தில் அது அடைந்திருந்த— வளர்ச்சியைப் பெற, அதை அதன் தன்மையிலேயே வளர அனுமதிப்பதும், அதற்கேற்ற சாதனங்களைப் பெற,முயற்சிப்பதும் தான் சரியானவழி. இதுதான் இக்கலாசாலையின் லக்ஷ்யம். உண்மை என்பது ஒன்று தான். ஆனால் உலகோர் அதை அறிய வழிகள் பல வகுத்துள்ளனர். இவ்வழிகள் ஒன்றுக்கொன்று தேவைக்கு உதவுவதிலோ, சில அம்சங்களை மற்றவைகளிலிருந்து ஸ்வீகரிப்பதிலோ கெடுதல் ஒன்றும் ஏற்படாது. இரண்டும் தன்னளவில் ஸ்திரப்படுத்தப் பட்டிருந்தால், வைத்ய விஷயத்திலும் இது உண்மைதான். ஆயுர்வேதம் போன்ற பல வைத்ய விக்ஞானங்கள் உலகில் ஏற்பட்டுள்ளன. எல்லாவற்றையும் காட்டிலும் பிரமிக்கத்தக்க விக்ஞான அபிவிருத்தி பெற்றது நவீன வைத்யம் எனப் பலர் கூறும் ஆலோபதிக் வைத்யம் இன்றளவில் விரிவு குன்றிய ஆயுர்வேதத்தின் வளர்ச்சிக்கு அதன் உதவி தேவையாக இருக்கலாம். அவ்வுதவி பெறுவதிலும் தவறு ஒன்று மில்லை.

இவ்வுதவி ஆயுர்வேதத்தின் சுயதேவை பூர்த்திக்காகத்தான். இது இரண்டுவிதமாக அளிக்கப்படலாம். முதன்முறையாவது— ஆலோபதிக் வைத்யர்கள், தன்னிலையிலிருந்து ஆயுர்வேதத்தில் என்ன என்ன குறைபாடுகளைக் காணுகிறார்களோ, அவைகளை அவர்களிஷ்டப்படி ஆலோபதிக் வைத்ய முறையின் அம்சங்களை அப்படியே சேர்த்துப் பூர்த்தி செய்வது. இம்முறையே இன்று ஆயுர்வேதம் அல்லது இந்தியவைத்யம் என்ற பெயர்கொண்ட வைத்ய முறையின் அபிவிருத்திக்காக சர்க்காராலும், சர்க்கார் அங்கீகாரம் பெற்றஸ்தாபனங்களாலும், இந்தியாவெங்கும் அனுஷ்டிக்கப்படும் முறை. ஆயுர்வேதம் அல்லது இந்தியவைத்யம் இந்தியப் பொதுமக்களின் ஆரோக்யப் பாதுகாப்பிற்கு இன்றியமையாததெனவும், அதைப்பாதுகாக்கவும் வளர்ச்சிஅளிக்கவும் உதவிஅளிக்கவேண்டுமெனவும் அந்தந்த ராஜ்ய

சர்க்கார்களால் நிறுவப்பட்ட பல கமிட்டிகளில் ஏகோபித்த அபிப் ராயப்படி இம்முறை பரீக்ஷார்த்தமாக அனுஷ்டானத்திற்குக்கொண்டு வரப்பட்டது கால் நூற்றுண்டுக்குமுன்னர். ஒன்றின் சுய தேவைப் பூர்த்திக்காக கடன்வாங்கும் அம்சம் காலக்கணக்கில் கிரமமாகக் குறைந்தால் தான் வளர்ச்சி எனலாம். ஆயுர்வேத விஷயத்தில் இவ்வித வளர்ச்சிக்குப் பதில் தேவை அம்சங்களின் வளர்ச்சி தான் அதிகமாகியிருக்கிறது. அதாவது இம்முறை அனுஷ்டானத்திற்கு வருமுன் தேவையாயிருந்த ஆலோபதிக் வைத்ய அம்சம் மூன்றில் ஒரு பங்கென கணக்கெடுக்கப்பட்டு திட்டம் வகுக்கப்பட்டது. இப் பொழுதோ மூன்றிலிரண்டு பங்கு தேவையென பாடத்திட்டங்கள் மாற்றப்பட்டுவருகின்றன. மற்ற அரசியல் முதலிய விஷயங்களில் போல் மற்ற ராஜ்யங்களுக்கு சென்னை தான் இப்புதுமைக்கும் வழிகாட்டி. இந்த ரீதியில் இன்னுமொரு கால் நூற்றுண்டிற்குள் மிகுந்த மூன்றில் ஒரு பாகமும் இதரவைத்யங்களிலிருந்து பூர்த்தி செய்யப்படத்தான் நேரிடும். ஆக, அப்பொழுது ஆயுர்வேதம் என்றபெயரளவில் ஒரு வைத்யம் இந்தியாவில் ஒரு காலத்தில் இருந் தது என இதிஹாஸங்களில்தான் அறிய நேரிடும். இது தான் முதல் முறை காட்டும் வழி.

இரண்டாவது— ஆயுர்வேத நிபுணர்களே ஆயுர்வேதத்தில் உள்ள குறைபாடுகளை ஆராய்ந்து அவைகளை நீக்க வெளிவைத்ய உதவி தேவையிருந்தால் அதைப்பெற்று, அவைகளை ஆயுர்வேத முறைப்படி ஆராய்ந்து தமதாக்கிக்கொள்ள வேண்டும். இம்முறை சில காலத்திற்குள் பூர்ணமான ஆயுர்வேதம் சிறந்தமுறையில் வைத்ய வசதி அளிக்கும் சக்தியைக் கொடுக்கும் இம்முறைக்கும் முன் கூறிய முறைக்கும் அடிப்படையிலேயே மிகுந்த வித்யாசம் உண்டு. பலனிலும்கூட. இந்தியாவில் எங்கும் இம்முறை அனுஷ்டா னத்திலில்லை. இம்முறை அனுஷ்டானத்தில் வந்தால்தான் உண்மை யான ஆயுர்வேத வளர்ச்சி உண்டாகும். ஆயுர்வேதத்தின் தலைவிதி யை நிர்ணயிக்கும் அதிகாரம் ஆலோபதிக் டாக்டர்களின் கைகளில் இருக்கும் வரை இம்முறை அனுஷ்டானத்திற்கு வராது. அதனுல் ஆயுர்வேதத்தின் வருங்காலத்தை நிர்ணயிக்கும் அதிகாரத்தை ஆயுர்வேத வைத்யர்களிடத்திலேயே அளிக்க பிரயத்னம் செய்வது தான் இதற்குகந்த வழி.

உலகில் ஏதாவது ஒரு வைத்ய முறை இருந்தால் போதுமான தெனச் சிலர் கருதுகின்றனர். எளிமையான இந்நாட்டில் பல்வேறு வைத்ய முறைகளுக்காகச் செலவிட நிதிவசதியின்மையையும் அவர் கள் காரணமாகக் காட்டுகிறுர்கள். இது சரியான விதமாகாது. இவ்வளவு மேன்மையான நிலையில் வியக்கத்தக்க ஆராய்ச்சிகளுடன் பிரகாசிக்கும் நவீனவைத்யமே ஆரோக்யநிலையைப் பாதுகாக்கப்

போதுமானதாக இல்லை. இம்முறையில் விசேஷ ஆராய்ச்சிகள் செய்துவரும் மேல் நாட்டினரே ஓரளவிற்கு மேற்பட்டுத் தங்களது வைத்ய முறையின் சக்தியின்மையை வெளியே கூறி சுதந்த்ரமடைந்த இந்தியா தனது முன்னோர்களின் அறிவுப் பொக்கிஷம் மூலம் அவ்விஷயத்தில் தேவையைப் பூர்த்திசெய்யவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

Dr. Alexis carrel என்னும் நோபல் பரிசுபெற்ற வைத்ய நிபுணரும், பிரிட்டிஷ் அரசியின் சஸ்திர வைத்ய நிபுணரான Dr. Kenneth Walker-ம் வெகுசமீபத்தில் வெளியிட்ட தமது புத்தகங்களில் கூறியுள்ள இவ்வாசகங்கள் ஆயுர்வேதத்திலிருந்து எவ்வளவு அவர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ளலாம்.

Like insanity, nervous disorders and intellectual weakness seem to have become more frequent...... Why do hygienists behave as though human beings were exclusively liable to infectious diseases.... Indeed, the number of deaths from infectious diseases has greatly diminished. But we still die, and we die in a much larger proportion from degenerative diseases. Diseases have not been mastered. They have simply changed in nature. Perhaps the triumphs of hygiene, medicine and modern education are not so advantageous as we are led to belive. —*Dr. Alexis Carrel.*

Now that India has obtined complete independence and has become a coequal in a group of allied nations, she has much to give us out of her store of ancient learning. —*Dr. Kenneth Walker.*

அவர்கள் இவ்விதம் எதிர்பார்ப்பதை தற்சமயம் வளர்ச்சிபெறும் ஆயுர்வேதம் பூர்த்திசெய்ய முடியுமா?

ஆயுர்வேதம் "ஆயுர்வேதமாக" வளர்ச்சி பெற்றால்தான் அது சாத்யமாகும். ஆயுர்வேதம் "ஆயுர்வேதமாக" வளர்ச்சிபெற ஆயுர்வேத ஆராய்ச்சி–வளர்ப்பு விஷயங்களில் ஆயுர்வேத வைத்யர்களுக்கே பூர்ண அதிகாரமும் வசதியுமளிக்கப்படவேண்டும். அந்நிலை என்று வரும்?

இன்றோ, நாளையோ, என்றோ அங்கிலே வரத்தான் போகிறது. एति जीवन्तमानन्दो नरं वर्षशतादपि என்கிறார் ஸத்யவாக்கான வால்மீகி. உயிருடனிருந்தால் என்றுவது நிச்சயம் ஆனந்தம்பெறலாம். அங்கிலே ஏற்படும் வரை ஆயுர்வேதத்தை "ஆயுர்வேதமாக"ப் பாதுகாக்கும் கடமை, பெரிய பொறுப்பு நமது ஸ்தாபனத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. இதன் ஸ்தாபகரான மஹான் பல்லாண்டுகளுக்குமுன் "கொழுத்த மேல் நாட்டு நாகரீகம் புராதனமான நம்தேச நாகரீகத்துடன் கலக்கும்பொழுது நன்றாக அவைகளுடன் ஒன்று சேராமல் இந்தியர்களின் தனிப்பட்ட கௌரவத்தை ஒழிக்கின்றதைப் பார்க்கிறோம். இதற்கு இடம் கொடுக்கக்கூடாதென" போதித்தார்கள். இவ்வெண்ணமே அவர்களுக்கு இந்த லக்ஷ்யத்துடன் இக்கலாசாலையை ஆரம்பிக்கத் தூண்டியிருக்கிறது. இவ்வெண்ணமே இன்றும் இக் கலாசாலையின் நிர்வாஹத்தை பழைய முறையிலேயே நடத்த முன் வரச்செய்கிறது. இதில் தான் எங்களுக்கு பெருமை. அதனுல் தான் சாஸ்திரப்பகுதியில் இங்கு அதிகக்கவனம் செலுத்தப்படுகின்றது. ஆயுர்வேதம் தனது தனிப்பட்ட தன்மையுடன் பூர்ணவளர்ச்சி அடையும் வழிக்கான இக் கலாசாலையின் நன்முயற்சிகள் சீக்கிரமே நற்பயனைத்தர எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

திருச்சி

ஆயுர்வேதிக் யூனியன் லிமிடெட்

17, சின்னக்கடைத் தெரு,
தெப்பக்குளம் P. O. திருச்சிராப்பள்ளி.

வைத்தியர்களுக்கு

எல்லா சாஸ்திரீய மருந்துகளும் மிகக் குறைந்த
விலைக்கு சப்ளை செய்யப்படும்.
விபரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

முன்னுரை.

பாலசிகித்ஸை என்பது ஆயுர்வேதத்தின் எட்டு அங்கங்களில் ஒன்றாகும். இதையே கௌமாரபிருத்யம், குமார தந்திரம், பால தந்திரம் என்றும் வழங்குவர்.

எட்டங்கங்களிலும் இதையே முதலாவதாகவும் முக்கியமானதாகவும் கூறுகிறார் கௌமாரபிருத்யத்தின் முதல் தனி நூலாசிரியரான காச்யபர். கௌமாரபிருத்யத்தின் உதவியால் சிசு நன்கு வளர்ந்த பின்னரல்லவோ மற்ற அங்கங்கள் உதவி அளிக்க இடம் ஏற்படும்!

"कौमारभृत्यमष्टानां तन्त्राणामाद्यमुच्यते ।
आयुर्वेदस्य महतो देवानामिव हव्यपः ॥"

"अनेन हि संवर्धितमितरे चिकित्सन्ति ।"

[காச்யபஸம்ஹிதை, விமான. 1. அ.]

பிறந்த குழந்தை சரீரம், மனது, ஆத்மா என்ற இம்மூன்றின் ஆரோக்கியத்துடன் புஷ்டியாக வளர வழிகளும், ஆரோக்கியம் குன்றினால் அந்நிலையில் ஏற்படும் பற்பல நோய்களுக்கான பரிகாரங்களும் கூறப்படும் தொகுதிக்கு கௌமாரபிருத்யம்—பால தந்திரம் எனப்பெயர். பிறந்த பின்னர் சிசு ஆரோக்கியமாயிருக்கவும் புத்தி, மேதை, நல்ல பண்பாடு, சரீரகாந்தி முதலியவை நன்றாக அமையவும் கர்ப்பந்தரிக்கும் முன்னரே தாய் தந்தையராக இருக்க விரும்புபவரின் ஆரோக்கியமும் சுக்ல சோணிதங்களின் சுத்தியும் தேவையானதால் கர்ப்பம் தரிப்பதற்கு முன்னமே தாய் தந்தையருக்குச் சில விசேஷ சிகித்ஸைகளும், கர்ப்பம் தரித்திருக்கையில் ஸம்ஸ்கார உருவிலுள்ள மற்றும் பல சிகித்ஸைகளும் அவசியமாகின்றன. அவை கௌமாரபிருத்யத்திலேயே இடம் பெறுகின்றன.

கௌமாரபிருத்யத்தை மூன்று அங்கங்களாகப் பிரிக்கலாம். முதலாவது— கர்ப்பம் தரிக்கும் முன்னர், ஸ்திரீ புருஷர்களின் சுக்ல சோணிதங்களின் புஷ்டியும் ஆரோக்கியமும், ஆரோக்கியம் குன்றினால், அதைத் தடுக்கும் உபாயங்களும், நற்பேறு பெற

உதவும் மற்ற முறைகளும் ஆக கர்ப்பாவக்ராந்திக்கு முன்னர் செய்யப்படவேண்டியவை.

இரண்டாவது— கர்ப்பம் தரித்த பின்னர், கர்ப்பத்தின் போஷணைக்கும், பிறக்கும் சிசு— நீண்ட ஆயுள், மேதை, புத்தி, முதலியவை பெற்றிருக்க தாயாருக்கு அளிக்கப்படும் சிகித்ஸை முறைகளும், பிரஸவித்தவுடன் தாயாருக்கு செய்யப்படுபவையும்.

மூன்றாவது— குழந்தை பிறந்த பின்னர் பிறந்த நிமிடத்திலிருந்து பால் பருகும் பருவம் (क्षीरादः), பாலும் அன்னமும் ஏற்கும் பருவம் (क्षीरान्नादः), அன்னம் ஏற்கும் பருவம் (अन्नादः) என்ற மூன்று பருவத்திலும், பிறந்த குழந்தை பதினாறு வயது கடக்கும் வரையில் அதன் ஆரோக்ய பரிபாலனத்திற்கும் வியாதித்தடுப்பிற்கும், பாலனுக்கும் அவனை யொட்டி தாயாருக்கும் செய்யவேண்டிய சிகித்ஸை.

ஆக இம் மூன்று அங்கங்களும் மிக முக்கியமானவை. இம் மூன்று விஷயங்களிலும் விஷயவாரியாகத் தொகுக்கப்பட்ட நூல் தனியாகக்காணப்பட வில்லை. எனினும் சரக-ஸுச்ருத ஸம்ஹிதைகளிலும் அஷ்டாங்க ஸங்கிரஹத்திலும் அஷ்டாங்க ஹிருதயத்திலும் இது சம்பந்தப்பட்ட பல விஷயங்கள் சாரீரத்திலும் மற்றும் பால சிகித்ஸாதிகாரத்திலும் கூறப்பட்டுள்ளன.

இவ்விஷயத்தில் தனிப்பட்ட நூல்களாக காச்யபரின் உபதேசப்படி ஜீவகர் தொகுத்த காச்யபஸம்ஹிதை, ராவணன் இயற்றிய பால தந்திரம், இந்நூற்றுண்டின் ஆரம்பத்திலிருந்த ஸ்ரீருத்ரவாரியர் அவர்கள் இயற்றிய ஆரோக்யகல்பத்ருமத்தின் பால சிகித்ஸாபாகம்- இம் மூன்றும் பிரசித்தி பெற்றவை. இவைகளில் ஆரோக்யகல்பத்ருமம் கௌமாரபிருத்யத்தின் மூன்றாவதான அங்கத்தை நன்றாக விஷய வாரியாக விவரிக்கக் கூடியது. தமிழிலும் ஆயுர்வேத நூல்கள் பல, பால வாகடம் என்ற பெயரில் பல சித்தர்களால் இயற்றப்பட்டுள்ளன.

கௌமாரபிருத்யத்தின் மூன்று அங்கங்களிலும் மேற்கூறிய நூல்களில் காணப்படும் நல்லுபதேசங்களை விஷயவாரியாகத் தொகுக்கவேண்டியதின் அவசியத்தை உணர்ந்து அவ்விஷயத்

தில் முயற்சித்தேன். தனிப்பட்ட ஒரு நூலாக அதை அமைப்பதைக்காட்டிலும், ஒரு முக்கிய நூலை ஆதாரமாகக் கொண்டு, மற்ற நூல்களில் காணப்படும் விசேஷங்களை அதன் துணைக் குறிப்புகளாகக் கொடுப்பது உசிதமெனத் தோன்றியது. பால சிகித்ஸைக்கென்றே தனியாக அமைக்கப்பட்ட ஆரோக்யகல்ப த்ருமத்தை ஆதாரநூலாகக் கொண்டு, அதன் தமிழாக்கத்துடன் மற்ற நூல்களில் காணப்படும் விசேஷ அம்சங்களைத் துணைக்குறிப்பில் கொடுத்து விஷய வாரியாக பால சிகித்ஸை என்ற இவ்வதிகாரம் வெளியிடப்படுகின்றது.

வைத்ய விசாரத எஸ். வி. **ராதாகிருஷ்ண சாஸ்திரீ. திருச்சி.**

பால சிகித்ஸை

[வைத்யவிசாரத எஸ். வி. ராதாகிருஷ்ண சாஸ்திரீ. திருச்சி.]

आयुष्याम्नायसाम्नाय नानोन्मेषैर्विवर्ध्य च ।
जगतः श्रेयसे सक्ताः स्मरणीया दयामयाः ॥
यत्प्रातिभरसासिक्तः आयुर्वेदमहातरुः ।
फलत्यद्यापि जगति महात्मानो जयन्ति ते ॥

ஆரோக்கியகல்பத்ருமம்.

முன்னோர்களான விருத்தவைத்யர்களின் உபதேசத்தைப் பின் பற்றி எல்லோருடைய உபகாரத்திற்காக பால சிகித்ஸை தனியாக விரித்துக் கூறப்படுகின்றது.

பாலன் :

பிறந்ததிலிருந்து பதினாறு வயது அடையும் வரை பாலன் என்ற பெயரால் குறிப்பிடப்படுவான். பதினாறு வயது வரை பாலன் என்ற பெயரிருப்பினும், அதற்குள் அவனுக்கு பதினொரு தனிநிலைகள் உள்ளன. இந்த ஒவ்வொரு நிலைகளிலும் அவனுக்குத் தனிப்பட்ட சிகித்ஸை செய்யப்படவேண்டியிருக்கின்றது. அவையாவன:

1. பிறந்தவுடன், 2. பிறந்து பதினைந்து நாட்களுக்குள், 3. பதினைந்து நாட்களுக்குப்பின், 4. மூன்று மாதங்களுக்குள், 5. ஆறு

மாதங்களுக்குள், 6. ஒரு வயது வரை, 7. மூன்று வயது வரை, 8 ஐந்து வயது வரை, 9. எட்டு வயது வரை, 10. பத்து வயது வரை, 11. பன்னிரண்டு வயதும் அதற்கு மேற்பட்டும்.

இவனுக்கு அளிக்கப்படும் சிகித்ஸை, ரோகங்கள் வராதிருப்பதற்காக அளிக்கப்படுவதெனவும், ரோகங்கள் வந்தபின் அவைகளைப் போக்க அளிக்கப்படுவதெனவும் இருவகைப்படும்.

பிறந்தவுடன் :

பிறந்தவுடன் சிசுவை எடுத்து கழுத்திற்குக் கீழ் எல்லா அங்கங்களிலும் இந்துப்புப் பொடித்துக் கலக்கிய புதிய வெண்ணெயை நன்கு தேய்த்துவிடவும். அரைக்கால் நாழிகை கழித்த பின்னர் மேல் தடவிய வெண்ணெயை தென்னோலை, துவாலை போன்ற மிருதுவான வஸ்துக்களால் எடுத்துவிடவும். பிறகு பலாதைலத்தை தலையிலும் அங்கங்களிலும் தடவி அரை நாழிகை ஊறவைக்கவும். இதனால் பிரஸவத்தின் அழுத்தத்தால் உண்டான வாயுவலி நீங்கி குழந்தைக்கு சிரமம் நீங்கும்.

பிறகு தொப்புள் கொடியை நாலுவிரலளவிற்கு மேல் ஒரு நூலால் கட்டி அதற்கு மேலுள்ளதை நறுக்கி விடவேண்டும். தொப்புள் கொடியைக் கட்டிய நூலின் மற்றொரு பாகத்தை குழந்தையின் கழுத்தில் இறுக்காதவாறு மாட்டிவிடவேண்டும். கழுத்தில் நூலை மாட்டும் போது, குழந்தைக்கு வலி ஏற்படாதவாறும், தொப்புள் கொடியில் கட்டப்பட்ட கட்டு விலகாமலும் அவிழ்ந்து விடாமலும் பார்த்துக்கொள்ளவேண்டும். வாஸனைக் கோஷ்டத்தின் எண்ணெயை நாபியில் தடவி, பின் பால் மரங்களின் பட்டை கஷாயத்திலோ ஸர்வகந்த வர்க்கத்திரவ்யங்களின் கஷாயத்திலோ சிசுவைக் குளிப்பாட்ட வேண்டும். தங்கக்கட்டி அல்லது வெள்ளிக்கட்டியைப் பழுக்கக் காய்ச்சி, அதனால் ஸ்னானம் செய்விக்க உபயோகப்படும் கஷாயத்தைச் சிறிது சூடாக்கிக்கொள்வது நல்லது.

துணைக்குறிப்பு.

சிசு பிறந்ததும் மயக்கமுற்றிருப்பது போல் சில சமயம் காணப்படும். சுவாசத்தை நன்கு இழுத்து விடாது, சாதாரணமாக சிசு வெளி

வந்தவுடன் அழும். அழுவதே அதற்கு மூச்சு நன்றாக இழுத்து விடப் புயிற்சி அளிக்கின்றது. குழந்தை தானாக அழாமலும் தெளிவடையா மலுமிருந்தால் செயற்கையாக மூச்சுவிடவும் அழவும் செய்ய வேண்டி யிருக்கிறது. காதிற்குப் பக்கத்தில் கற்களை ஒன்றோடொன்று மோதி சப் தப்படுத்துதல், (அல்லது வேறுவகையில் சப்தப்படுத்துதல்,) குளிர்ந்த நீரிலோ வென்னீரிலோ துணியை நனைத்து அதனால் முகத்தைத் துடைத் தல், முறம் அல்லது பெரிய விசிறி இவைகளால் வேகமாக வீசுதல் போன்ற செயற்கை முறைகளால் நன்கு மூச்சுவிடும்படி செய்யவேண்டும். வெளியிலுள்ள குளிர், வெப்பம், காற்று இவைகளை அறியாது தாயின் கர்ப்பாசயத்திலுள்ளுள்ள கதகதப்பில் இது காறும் வளர்ந்த குழந்தை திடீரென வெளிப்படுத்தப்பட்டவுடன் உள்ள திகைப்பே மூச்சு சரியாக விடாமல் மயக்க முற்றிருப்பது போல் காணப்படுவதன் காரணம் செயற்கையில் வழிகாண்பித்தபின் இயற்கை தன் காரியத்தை ஆரம்பித்து விடுகிறது.

அத்துடன் சிசுவின் வாயினுள் தொண்டையில் கபம் சிக்கியிருந்து சுவாஸம் விடுவதையும் அழுவதையும் தடை செய்யுமாதலால் நகமெடுத்து சுத்தமாக்கிய விரலில் துணியைச் சுற்றிக்கொண்டு மெதுவாக தொண்டை வாய் நாக்கு இவைகளைத் துடைத்து கபத்தை வெளிப்படுத்த வேண்டும். இதன் பிறகு வெண்ணெயிலோ நெய்யிலோ இந்துப்புப் பொடி கலந்து உடலில் பூசித்துடைப்பதால், நஞ்சுக்கொடி-ஜலம்-ரத்தம் இவை களின் ஜவ்வு பூச்சால் ஏற்பட்ட அழுக்கு விலகும். குழந்தையும் ஆச்வா சமடையும். இதற்குள் ஸ்வதந்திரமாக சிசு மூச்சு விடுகின்றது-ஜீவித்திருக் கின்ற தென்பதை அறிந்துகொள்ளலாம். பிறகுதான் தொப்புள் கொடியை அறுக்கவேண்டும். இதற்குள் நஞ்சு தாயாரின் கர்ப்பப்பையை விட்டு நழுவ ஆரம்பித்துவிடுவதால் தொப்புள் கொடி வழியே ரத்த ஓட்டமும் நின்று விடும். அவ்விதம் ரத்த ஓட்டம் நின்றபின்னரே தொப்புள் கொடியை 4 விரல் நீளம் (3 அங்குலம்) விட்டுக் கட்டி மறுபடியும் ஓர் அங்கு லம் தள்ளி மற்றொருகட்டுக் கட்டி இரண்டு கட்டுகளுக்கும் நடுவே கத்தி யால் மேல் முகமாக நறுக்கவேண்டும். இரண்டாவது கட்டு இரட்டை யாக மற்றொரு குழந்தை பிறக்கவிருப்பின் அக்கொடியிலிருந்து ரத்தம் கசிந்து அக்குழந்தைக்கு ஏற்படும் ஆபத்தைத் தடுக்கவே செய்யப்படுகின் றது. தொப்புள் கொடியைக்கட்டிய நூலின் மற்றொரு பாகத்தைக் குழந் தையின் கழுத்தில் மாட்டுவது அதன்வழியே கசிவு ஏற்படாதிருக்கவே தற்காலம் கழுத்தில் மாட்டாமல் அதன்மேல் ஒரு கட்டு துணியால் கட்டப் படுகின்றது.

(தொடரும்.)

<u>வைத்யச் செய்திகள் :</u>

ஆயுர்வேதத்தில் நிதிமந்திரி நம்பிக்கை.

(சென்னை, மார்ச்சு 21.) சென்னை வெங்கட்ரமண ஆயுர்வேத கலாசாலை ஸ்தாபகர் தினக்கொண்டாட்டத்தில் தலைமை வகித்த சென்னை ராஜ்ய நிதி மந்திரி கனம் ஸி. ஸுப்ரமண்யம் அவர்கள் ஆயுர்வேதத்தைப்பற்றிப் பேசும்போது, ஆயுர் வேதம் மற்ற வைத்ய முறைகளிலுள்ள எந்த அம்சத்தையும் தனதாக்கிக் கொள்ள சக்தி யுடையதென தான் திடமாக நம்புவதாகக்கூறினர். அன்று ஸ்தாபகர் நினைவுப் பேருரையை நிகழ்த்திய ஸ்ரீ எஸ். வி ராதாகிருஷ்ண சாஸ்திரி, ஆயுர்வேதம் தனக்குத்தேவையான அம்சங்களைப் பிறமுறைகளிலிருந்தும் ஏற்று வளர புதிதாக ஒரு திட்டம் வகுக்கப்படவேண்டு மென்பதை வற்புறுத்தினர். (அவருடைய பேருரைக்குறிப்பு பிறிதொரு இடத்தில் வெளியிடப் பட்டுள்ளது.) அன்னர் பேசியதையும் வெங்கட்ரமண ஆயுர்வேத கலாசாலை வைத்யசாலைகள் பொதுஜனங்களுக்குச் செய்து வரும் வைத்ய உதவியையும் பாராட்டி நிதிமந்திரி மேலும் கூறியதின் ஸாரமாவது;—

மனிதன் எந்த நோய்க்கும் ஆளாகக் கூடியவனே. அதிலிருந்து பாதுகாப்பு பெற்றவனல்ல. வியாதியின் கடுமையைக் குறைப்பதில் வைத்யர்கள் பெரும் ஸேவை புரிகிருர்கள். வைத்யர்கள் நோயாளிகளைக் கருணையுடன் அணுகுவது நோயைப் பெரிதும் குறைக்கும். ஆயுர்வேத கலாசாலையின் மகோன்னதமான ஸேவையை ஸமீபத்தில் தான் அறிந்துகொண்டேன்.

மனித உடல் தனக்குப் புறம்பான ஜலம், காய், கனி, தான்யம் முதலியவைகளை உணவாக ஏற்று, அவைகளில் தனக்கு இதமானவைகளைத் தனதாக்கித் தேவையில்லாததை வெளிப்படுத்துகின்றது. ஆரோக்கியத்தின் முக்கியச் சின்னம் இது. ஆரோக்யம் சற்று குறைந்தாலோ, தனக்கு ஏற்காத முறையில் உணவுப் பொருளை ஏற்ருலோ, ஆரோக்யம் குன்றுகின்றது. திடமான உடலாக இருந்தால் எவ்வகையான உணவையும் ஜீர்ணிக்க முடியும். தனக்குப் புறம்பான பொருளை ஏற்றுக்கொள்வது (உடல் ஆரோக்ய மாயிருந்தால்) யாதொரு கெடுதலையும் விளைவிக்காது, உடலில் வளர்ச்சியையே தரும்.

அவ்விதமே ஆயுர்வேதம் தனக்குப் புறம்பான மற்ற வைத்ய முறைகளிலிருந்தும் உபயோகமான அம்சங்களை ஏற்றுக்கொள்வது ஆயுர்வேத வளர்ச்சிக்கு மிகவும் உதவும். ஒரு விக்ஞானம் வேறு தத்வங்களைத் தனதாக்கிக்கொள்ள சக்தி உள்ளதாக இருக்க இயலாவிடில் அல்லது தான் ஏற்றுக்கொண்டவை தனக்கு மாறுபட்டவைகளாகவே இருக்க அனுமதித்தால் அது கெடுதலையே விளைவிக்கும். ஆனல் ஆயுர்வேதம் சம்பந்தப்பட்டவரையில் அது ஸ்திரமான அடிப்படையில் வகுக்கப்பட்டதால் வேறு எந்த முறையிலிருந்தும் தனக்குத் தேவையான அம்சங்களை ஏற்றுத் தனதாக்கிக் கொள்ள பூர்ண சக்தி பெற்றது என்பதை நான் திடமாக நம்புகிறேன். இதில் சேர்க்கப்படும் அம்சங்களில் ஒருவித கெடுதியும் ஏற்படாது. மேலும் அவை ஆயுர்வேதத்தின் பூர்ண வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமில்லை. இதர முறைகளின் மோதலால் இதன் முன்னேற்றம் சிறிதும் தடைபடாது.

இந்தியவைத்ய முறைகள்-மத்ய சுகாதார கவுன்சிலின் சிபார்சுகள்

பிப்ரவரி 8—10 தேதிகளில் கூடிய மத்ய சுகாதார கவுன்ஸில் இந்தியவைத்ய முறைகளான ஆயுர்வேத யூனனிமுறைகளின் படிப்பு விஷயமாகக் கீழ்க்கண்ட சிபார்சுகளைச் செய்திருக்கின்றது.

இண்டர்மீடியட் பரீக்ஷைகளில் விக்ஞானப் பகுதியில் தேர்ச்சிபெற்றவர்களுக்கு மாத்திரம் பிரவேச அனுமதி உடைய 5 வருஷங்களுக்கான டிகிரிப் படிப்பு முறை ஏற்படுத்தவேண்டும். ஆயுர்வேதத்திற்கு விசேஷமாக ஸம்ஸ்கிருதத்திலும், யுனனிக்கு அராபிக் பெர்ஷிய பாஷைகளிலும் நல்ல ஞானம் இருக்க வேண்டும். தற்சமயம் உள்ள இந்திய வைத்யக் கல்லூரிகளின் தரத்தை உயர்த்தி, துரிதமான வளர்ச்சிக்கு வழி வகுத்து, post Graduate படிப்பு முறைக்குகந்த ஏற்பாடுகளும் செய்யப் படவேண்டும். இதில் மத்யசர்க்கார் அதிக சிரத்தை காட்டவேண்டும். மத்ய சர்க்கார் மற்ற ராஜ்ய சர்க்கார்களுடன் கலந்து கொண்டு ஆராய்ச்சிக்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். மேலும், நல்ல பயிற்சியுடன் பதிவு செய்து கொண்டவர்களே வைத்யம் செய்ய அனுமதிக்கப்பட வேண்டும்.

ஹைதராபாத்தில் ஆயுர்வேத வைத்யசாலைகளுக்கு உதவி: ராஜ்ய பொது சுகாதார மந்திரி அளித்த தகவல்:

(மார்ச்சு 26.) தற்சமயம் ராஜ்யத்தில் 51 ஆயுர்வேதவைத்ய சாலைகள் உள்ளன. ரூ 50—லிருந்து ரூ 100 வரை இவைகளுக்குப் பிரதிமாதமும் மான்யமளிக்கப்படுகின்றது. அந்த ஆயுர்வேத வைத்யசாலைகளில் வேலை செய்யும் வைத்யர், சர்க்கார் உத்யோகஸ்தரல்லாவிட்டாலும் சர்க்காரின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவரே.

மத்ய சர்க்கார் சுகாதார மான்யம்-பட்ஜெட் விவாதம்.

மத்ய சர்க்காரின் சுகாதார மான்யத்தைப் பற்றிய பட்ஜெட் விவாதத்தைத் துவக்கிப் பேசிய டாக்டர். என். எம். ஜயஸூர்ய (ஹைதராபாத்) ஆயுர்வேத முறையைச் சர்க்கார் ஆதரிக்க வேண்டுமென்று நிர்பந்தித்தார். அவர் கூறியதாவது—"ஆயுர் வேத முறை மலிவானது, எளிதான வழியிலுள்ளது, மிகவும் சக்தி வாய்ந்தது. அது நோய்களைத் தீர்க்க சக்தியற்றதென நிரூபிக்கத் தகுந்த விஞ்ஞானச் சான்றுகள் கிடையாது. அதனால் ஆயுர் வேத முறையை சர்க்கார் ஆதரித்தே ஆகவேண்டும். சர்க்கார் அதை ஆதரிக்காவிடில் ஜனங்கள் சீக்ரமாகவோ சற்று தாமதித்தோ சர்க்காரை, ஆயுர்வேதத்தை ஆதரிக்கும்படி நிர்பந்திப்பார்கள். இந்தியாவில் கிராமங்களுக்கு வைத்ய வசதி அளிப்பதே இப்பொழுது உள்ள பெருத்த பிரச்னை. சர்க்காரால் நவீன வைத்ய முறைகளைப் பயின்ற டாக்டர்களைத் தேவையான அளவுக்கு கிராமங்களுக்கு அனுப்ப இயலாது. ஆகவே, சர்க்கார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், ஆயுர்வேத முறையே இன்னும் வெகுகாலத்திற்கு கிராமங்களுக்கு வைத்ய வசதி அளிக்கப் பிரதானமாக இருக்கும்."

ஆர். வி. துலேகர் — (உ. பி.) அலோபதிவைத்யம் இந்தியாவின் வைத்ய உதவி அளிப்பு விஷயத்தில் பூர்ணமாக உதவ முடியாது. அதனால் சுகாதார மந்திரியின் கீழ் ஆயுர்வேதத்திற்கென தனியாக ஒரு டிபார்ட்மெண்டு ஏற்படுத்தி ஆயுர்வேத வளர்ச்சிக்கான எல்லா கார்யங்களையும் செய்ய வசதியும் அதிகாரமும் அதற்கே அளிக்கப்படவேண்டுமென்று வற்புறுத்தினர்.

சுகாதாரமந்திரி ஸ்ரீமதி ராஜகுமாரி அமிருத்கௌர் விவாதத்திற்குப் பதிலளிக்கையில் கூறியதாவது:—ஆயுர்வேதம் இந்தியாவில் பல நூற்றாண்டுகளாக நிலைத்திருந்திருக்கின்றது. ஆனால் எக்காரணத்தாலோ அதன் வளர்ச்சி நடுவில் தடைப்பட்டுள்ளது. அலோபதி வைத்யமோ உலகிலுள்ள எல்லா வைத்ய முறைகளும் இதுகாறும் அடைந்த வளர்ச்சியின் பயனைப் பூர்ணமாகப் பெற்று விளங்குகிறது.

ஆயுர்வேத வைத்யம் செய்பவர்கள் நல்ல பயிற்சி பெற்றிருக்க வேண்டும். இந்தியா மருத்துவ விஷயத்தில் மற்ற தேசங்களுக்குப் பின் வாங்க முடியாது. மற்ற எல்லா விஷயங்களிலும் நவீன விக்ஞானத்தின் உதவியால் மிகவும் முன்னேற்றமடைந்து வரும் இந்தியா வைத்யவிஷயத்தில் மாத்திரம் ஏன் பின்தங்கவேண்டும்? ஆயுர்வேதம் வைத்ய உதவி விஷயத்தில் தனிப்பட்ட முறையில் ஏதாவது விசேஷ,உதவி அளிக்கக்கூடுமா என்பதை விக்ஞான ரீதியில் ஆராய வெகுவாக சர்க்கார் செலவுசெய்கின்றனர். அவ்விதம் விக்ஞானரீதியில் நிரூபிக்கப்படுபவைகளை ஏற்க சர்க்கார் தயங்காது. அதனால் Post Graduate படிப்பு முறையில் ஆயுர்வேதத்தைக் கற்பித்தால் அது நவீன விக்ஞானத்திற்குப் பெரிதும் உதவ முடியும். ஒரு பொருள் மலிவென்பதற்கோ, சுதேசி என்பதற்கோ தனிச்சலுகை காட்ட இயலாது. ஆனால் ஆயுர்வேதவைத்யம் செய்ய ஒருவிதத் தடையும் இந்தியாவில் இல்லை. ஆயுர்வேத வைத்யர்கள் ஆங்காங்கு ராஜ்யசர்க்கார்களால் நியமிக்கப்பட்டுள்ளார்கள். எங்கெங்கு நல்ல சேவை நடைபெறுகிறதோ ; அவைகளுக்கு நான் ஆதரவளித்தே வருகிறேன்.

தில்லை:

டெல்லியில் ஸ்டேட் கௌன்ஸில் கூட்டத்தில் ஸ்ரீ மதுர் 'சர்க்கார் இந்திய வைத்தியத்தில் நம்பிக்கை வைத்துள்ளதா' எனக் கேட்டார். தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் (உபஜனாதிபதி) அளித்தபதில்—

"சர்க்காருக்கு உயிர் கிடையாது. அதனால் அது நம்பிக்கை வைக்கமுடியாது."

உயிருள்ளவர்களைப்பற்றியதான ஆயுர்வேதத்தில் உயிரற்ற சர்க்கார் நம்பிக்கையோ அபிமானமோ வைக்காதது ஆச்சரியமில்லை அல்லவா?

ஆயுர்வேதம் மலிவென்பதற்காக்வோ, சுதேசி என்பதற்காக வோ உயர்ந்ததாகக் கருதமுடியாது— ராஜகுமாரி அமிருத்கௌர்.

அலோபதிக் வைத்யம் மலிவானதல்ல (மிகச்செலவு ஆகக் கூடியது) என்பதற்காகவும், வெளிநாட்டிலிருந்து வந்ததென் பதற்காகவும் தான் உயர்ந்ததெனக் கருதி சர்க்கார் அதை ஆத ரிக்கின்றனர் போலும்!

***

"நவீன உலகம் பெற்றுள்ள எல்லா உயர்ந்தவைகளையும் நாம் நம் மக்களுக்கு அளித்தே தீரவேண்டும்."—ராஜகுமாரி அமிருத்கௌர்.

நவீன வைத்யத்தை இன்றளவிலும் தடுமாறச் செய்யும் நரம்பு சம்பந்தப்பட்ட நோய்களில் ஆயுர்வேதம் அளிக்கும் உத வியை சர்க்கார் புறக்கணித்தே ஆகவேண்டுமல்லவா! ஆயுர் வேதம் நவீன உலகத்தால் அளிக்கப்பட்டதல்ல வாகையால் தான் சென்னை இந்திய வைத்தியக் கல்லூரியில் பஞ்சகர்ம வார்டை எடுத்துவிட முயற்சிக்கிறார்கள் போலும்!

ஆயுர்வேத ஆஸ்பத்திரித் திறப்பு.

ஆரணி வண்டிப்பாளையத்தில் சேர்மன் ராவ்பஹதூர் ஸ்ரீநி வாஸ முதலியார் ஸமீபத்தில் திறந்து வைத்தார். ஸ்ரீ மதன கோபால் நாயடு வைத்யராக நியமிக்கப் பட்டிருக்கிறார். பக்கத்தில் ஏழைத் தொழிலாளர்கள் அதிகமாக விருப்பதால் இவ்வாஸ்பத் திரி திறக்கப்பட்டது.

பாரத ஆயுர்வேத சாலா

27. சின்னக்கடைத் தெரு. தெப்பக்குளம். திருச்சி.

எல்லாவித சாஸ்திரீயமான

— ஆயுர்வேத மருந்துகள் —

மிகக் கவனத்துடன் தயாரிக்கப்பட்டவை.

வைத்யர்களுக்கு விசேஷ சலுகை உண்டு.

விபரத்திற்கு எழுதவும்,

ஸ்ரீ:

ஸ்ரீ தந்வந்தரயே நம:

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்

(நிகில பாரத ஆயுர்வேத மஹாமண்டலத்தின் தமிழ் மாகாணக் கிளைச்சங்கம்.)

(22-2-54 முதல் நடைமுறையிலுள்ளது.)

—o—

[இது நிகில பாரத ஆயுர்வேத மஹாமண்டலத்தின் தமிழ் மாகாணக் கிளைச் சங்கமானதால் மூல மண்டலத்தின் விதிகளனைத்தும் அநேகமாய் அனுஷ்டிக்கப்பட வேண்டும். ஆனால் தமிழ் நாட்டின் சூழ்நிலையை அனுஸரித்து அவசியமான சில நியமங்கள் தனிப்பட்ட முறையில் செய்துகொள்ளவும் இதற்கு உரிமையுண்டு.]

ஆரம்பம்.

1916-ம் வருஷத்தில் பூனா நகரத்தில் நடைபெற்ற நிகில பாரத ஆயுர்வேத மஹாஸம்மேளனத்தின் எட்டாவது தீர்மானப்படி பாரத தேசத்தின் மாகாணங்களை பாஷாவாரியாகப் பிரித்து, தமிழ் மாகாணக் கிளைச் சங்கமாக இது நிறுவப்பட்டது.

இத்தமிழ் மாகாண மண்டலம் நிகில பாரத ஆயுர்வேத மஹாமண்டலத்துக்குப் பிரதி வருஷமும் ரூபாய் இருபத்தைந்து மட்டில் இணைப்புக் கட்டணமாக கட்டி வருவது தவிர இரண்டுக்கும் பொருள் விஷயமாக வேறு ஒருவித ஸம்பந்தமும் கிடையாது.

பெயர்: ஸம்ஸ்க்ருதத்தில்-"द्रविडायुर्वेदमहामण्डलम्"

தமிழில்: "தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்"

விதிகள்.

1. அங்கத்தினர்கள் மூன்றுவகை.

a. போஷகர்: ஒரே தடவையில் ஆயிரம் ரூபாய்க்குக் குறைவின்றி அளிப்பவர்கள். இவர்கள் ஆயுள் அங்கத்தினர்களாவார்.

b. ஆயுள் அங்கத்தினர்: ஒரே தடவையில் நூறு ரூபாய்க்குக் குறைவின்றி கொடுப்பவர் அல்

வது தொடர்ச்சியாகப் பன்னிரண்டு மாதங்களில் ஒவ்வொரு மாதமும் பத்து ரூபாய் அளிப்பவர்.

C. ஸாதாரண அங்கத்தினர்: ஆயுர்வேத சாஸ்த்ரத்தை எந்த பாஷையிலாவது* குருகுல முறையில் அல்லது வித்யாலயத்தில் பயின்று சிகிச்சை செய்து வரும் வைத்யர்கள் அனைவரும் அங்கத்தினராக உரியவர்கள். இவர்களுக்கு வருஷச் சந்தா ரூ. ஐந்து.

மேற்கண்ட மூன்றுவித அங்கத்தினர்களுக்கும் வோட்டு உரிமை ஸமம். போஷகர்களும், ஆயுள் அங்கத்தினர்களும் அபிமானிகளாகவும் இருக்கலாம். வைத்யராகவே இருக்க வேணுமென்கிற நிர்பந்தம் கிடையாது.

மண்டலத்தின் வருஷம்.

2. ஜனவரி முதல் டிஸம்பர் வரையிலான காலண்டர் வருஷமாகும். பிரதி வருஷமும் ஏப்ரல் மாதத்துக்குள் பழைய அங்கத்தினர் ஒரே தடவையில் சந்தாத் தொகை ரூபாய் ஐந்தைச் செலுத்திப் புதுப்பித்துக்கொள்ளவேண்டும். அவ்விதம் புதுப்பித்துக் கொள்ளாதவர் தமது வோட்டுரிமையை இழப்பர். புதிய அங்கத்தினர் வருஷ நடுவில் எப்போது சேர்ந்தாலும் ஜனவரி முதல் ஆரம்பித்து டிஸம்பரோடு முடிவடையும். மஹாஸம்மேளனத்துக்கு 60 நாட்களுக்குள்ளாகச் சேரும் அங்கத்தினர்களுக்கு அவ்வருஷத் தேர்தலில் வோட்டுரிமை கிடையாது.

3. எல்லா அங்கத்தினர்களுக்கும் மண்டலத்தால் பிரசுரிக்கப்படும் "வைத்ய சந்த்ரிகை" என்கிற பத்ரிகை பிரத்யேக சந்தா அன்றியில் இலவசமாகவே அனுப்பப்பெறும். அங்கத்தினர் இஷ்டப்பட்டால் மண்டலச் சந்தாவை வைத்ய சந்த்ரிகையை V. P. P. மூலம் அனுப்பி வஸூல் செய்யலாம்.

---

*தமிழ்நாட்டில் ஸித்தவைத்யம் எனப் பிரஸித்தமான வைத்ய சாஸ்த்ரத்துக்கும், ஆயுர்வேதத்துக்கும் பாஷை வேற்றுமை தவிர விஷய வேற்றுமையே கிடையாதாகையால் ஸித்தவைத்யரும் வைத்ய அங்கத்தினராகப் பூரண உரிமையுள்ளவர்.

கிளைச்சங்கங்கள்.

4. ஒவ்வொரு ஜில்லாவின் தலைநகரிலாவது அல்லது ஒரு முக்கிய இடத்திலாவது இம்மண்டலத்தின் நேர் கிளைகளாக கீழ்க் கண்ட விதிகளுடன் அமைக்கப் படலாம்.

பெயர்: தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம் ....ஜில்லா கிளை. இதற்குக் குறைந்த பக்ஷம் ஐந்து அங்கத்தினர்கள் கொண்டதாக இருக்கவேண்டும். கிளைச்சங்கம் தமது எல்லா அங்கத்தினர்களையும் மஹாமண்டல அங்கத்தினர்களாகச் சேர்க்க வேண்டும். மஹாமண்டலத்திற்கு நியமப்படி சந்தா செலுத்தியவரே கிளைச்சங்க அங்கத்தினராக இருக்கத் தகுதியுடையவர்.

5. இக்கிளைச் சங்கத்தின் தனிப்பட்ட பொருள் வரவு செலவில் மஹாமண்டலத்துக்கு எவ்வித ஸம்பந்தமும் கிடையாது.

6. கிளைச் சங்கம் தமது தொகுதியில் மஹாமண்டலத்தின் அங்கத்தினர் கட்டணமாக வசூலிக்கும் சந்தாத் தொகையை மாகாண சங்கத்தார்க்கு அனுப்பி, கிளைச் சங்கத்தின் நிர்வாகச் செலவிற்காக ஐந்தில் ஒருபாகம் பெற்றுக் கொள்ளவேண்டியது.

7. இக்கிளைச் சங்கம் அந்தந்த ஜில்லா முழுவதும் மஹாமண்டலத்தின் லக்ஷ்யங்களான காரியங்களில் ஈடுபடுவதுடன் மண்டலத்தின் பொது நியமங்களுக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

8. கிளைச்சங்கம் தனது வார்ஷிக ஸம்மேளனம் நடக்கும் சமயத்தில் மஹாமண்டலத்தையும் கலந்து கொள்ள வேண்டும். மூன்று மாதத்துக் கொருமுறை அதன் கார்யக்ரமங்களையும், தீர்மானங்களையும் மற்றும் விசேஷ கார்யங்களையும், உடனுக்குடன், வரவு செலவுகளையும் தெரிவிப்பதுடன், வருஷ முடிவில் அவ்வருஷத்திய நிர்வாக விஷயங்கள் பூராவும் விரிவாய்த் தெரிவிக்கப்பட வேண்டும்.

9. கிளைச் சங்கத்தினுடைய தலைவர் காரியதரிசி அல்லது கிளையால் நியமனம் செய்யப்படும் இருவர் மஹாமண்டலத்தின் நிர்வாக சபையில் ஸ்தானம் பெறுவர்.

இணைப்புச் சங்கங்கள்.

10. மஹாமண்டலத்தின் நோக்கங்களுக்கு முரண்படாத இதர வைத்ய சங்கங்கள் பிரதி வருஷமும் இணைப்புச்சந்தாவான ரூபாய் பத்து செலுத்தி மஹாமண்டலத்துடன் இணைப்புச் சங்கமாகி ஆயுர்வேத ஸேவைகளை ஒற்றுமையுடன் செய்து வரலாம். இவ்விணைப்புச் சங்கத்துக்கு வைத்ய சந்த்ரிகை ஒரு காபி அனுப்பப் படுவதுடன் ஒரு வோட்டு உரிமையும் உண்டு.

நிர்வாஹ ஸபை.

(ஸ்தாயி ஸமிதி)

11. தலைவர் 1, உபதலைவர்கள் 2, பிரதான காரியதரிசி 1, உபகார்யதர்சிகள் 2, பொக்கிஷதார் 1, வைத்ய சந்த்ரிகை ஆசிரியர் 1, உதவி ஆசிரியர் 1, பிரசுரம் செய்பவர் 1, தமிழ் ஜில்லாக்கள் பதினொன்றுக்கும் 22, தலை நகரமான சென்னையில் 4 ஆக 36 மெம்பர்களடங்கியதாகவிருக்கும். ஒவ்வொரு வருஷமும் மஹாஸம்மேளன ஸமயத்தில் அடுத்த வருஷத்து சபை தேர்தல் மூலம் அமைக்கப்பட வேண்டும்.

12. தலைவர்: மஹா ஸம்மேளனத் தலைவரே இச்சபைக்கும் தலைவராவர். தலைவர் மட்டும் மஹா ஸம்மேளனத்துக்கு முன் அங்கத்தினர்களுடைய வோட்டு மூலம் தேர்ந்தெடுக்கப் படவேண்டும்.

13. நிர்வாஹ ஸௌகர்யத்துக்காக மண்டல கார்யாலயம் இருக்கும் இடத்தில் (தலைவரில்லாதிருந்தால்) உபதலைவர் 1, காரியதரிசிகள் மூவரில் இருவர், பொக்கிஷதார் 1, வைத்ய சந்த்ரிகை சம்பந்தமான மூவரில் ஒருவர், ஜில்லா அங்கத்தினர்கள் மூவர் இருக்கும்படி அமைக்கப்பட வேண்டும்.

14. வருஷ நடுவில் நிர்வாக சபை அங்கத்தினர்களின் ஸ்தானம் பூர்த்தி செய்யப்பட வேண்டியதாக நேர்ந்தால் தலைவர் இஷ்டப்படி நியமனம் செய்யலாம். கார்யத்துக்கு அவசியமில்லாவிடின் நியமனம் செய்யாமலுமிருக்கலாம்.

15. ஜில்லா அங்கத்தினர் பொறுக்குவதில் கிளைச் சங்க மிருக்குமிடங்களில் சங்கத் தலைவர், காரியதரிசி இருவர்களையாவது அல்லது சங்கத்தினல் நியமிக்கப்படும் இருவரையாவது சேர்த்துக்கொள்ள வேண்டும்.

16. கிளைச்சங்கமில்லாத ஜில்லாக்களில் பொதுக் கார்யதரிசியரால் அங்கத்தினர் பொறுக்கப்பட்டு நியமிக்கப் படுவர்.

17. அவசியம் ஏற்படின் ஒரு ஜில்லாவில் மூன்று அங்கத்தினர்களும் மற்றொரு ஜில்லாவில் ஒரு அங்கத்தினருமாக நியமிக்கப் படலாம். அவசியம் ஏற்படின் ஒரு உப கார்யதர்சியும் வைத்ய சந்த்ரிகை உதவி ஆசிரியரும் மாதச் சம்பளம் பெறுபவராகவும் நியமிக்கப் படலாம்.

தலைவரின் யோக்யதாம்சம் நியமனம் முதலியன.

18. தலைவர் ஆயுர்வேத வைத்யராகவே இருத்தல் வேண்டும். எந்த ஜில்லாவில் ஸம்மேளனம் நடைபெறுகிறதோ அந்த ஜில்லா அங்கத்தினரைத் தலைவர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கக்கூடாது. அங்கத்தினர்களுக்கு சௌகர்யமாயிருக்க மஹாமண்டல அங்கத்தினர்களின் பெயர் விலாஸமடங்கிய குறிப்பு ஒன்று வைத்திய சந்த்ரிகை மூலமாகவோ தனியாகவோ தேர்தலுக்கு முன் எல்லா அங்கத்தினர்களுக்கும் கிடைக்குமாறு பொதுக்காரியதரிசி ஏற்பாடு செய்யலாம். பொதுக் கார்யதர்சியால் எல்லா அங்கத்தினர்களுக்கும் தலைவர் பதவிக்கு ஐந்து பெயர்களைத் தேர்ந்தெடுத்துத் தெரிவிக்கும்படி அனுப்பப் படும் நமூனவில் கண்டபடி நிர்வாக சபையினரால் கணக்கிடப்பட்டு வரிசைக் கிரமமாக அதிக வோட் பெற்றவர்களில் முதல் ஐந்து நபர்களின் பெயர்களை ஸம்மேளனத்தை நடத்தும்

வரவேற்புச் சங்கத்துக்கு அனுப்ப வேண்டும். அதிகமான நபர் ஒரே எண்ணிக்கையுள்ள வோட்டுகள் பெற்றிருந்தால் சீட்டுக் குலுக்கி அதில் தேர்ந்த ஐவரின் பெயரை மாத்திரம் வரவேற்புச் சங்கத்திற்கு அனுப்பவேண்டும். வரவேற்புச் சங்கத்தினர் இந்த ஐந்து நபர்களில் அவரவர்களின் வோட்டுக்கள் எண்ணிக்கையையும், இதர ஸௌகர்யங்களையும் கவனித்து ஒருவரை ஸம்மேளனத் தலைவர் பதவிக்குத் தேர்ந்தெடுப்பர்.

நிர்வாஹஸபையினர் காரியங்கள்.

19. மண்டலத்தின் எல்லாவித கார்யங்களையும் ஆலோசித்துத் தீர்மானம் செய்து அனுஷ்டானம் செய்வது. பொதுக் காரியதரிசியால் குறைந்தது மூன்று மாதத்துக்கொருதடவை நிர்வாக சபை கூட்டப்பட வேண்டும். கூட்டம் நடத்த குறைந்தது 15 நாள் அவகாசத்துடன் எல்லா அங்கத்தினர்களுக்கும் அறிக்கை அனுப்பவேண்டும். மிக அவஸரமாகக் கூட்டம் நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடின் வெளியூர் அங்கத்தினர்களுக்கு அறிக்கை அனுப்பப்படாமலுமிருக்கலாம். கூட்டம் நடந்தபின் விஷயத்தை எல்லோருக்கும் தெரியப் படுத்துவதவசியமாகும்.

20. தபால் செலவின் சிக்கனத்தைக் கருதியும், மற்ற சாதாரண அங்கத்தினர்களுக்கும் தெரிவிக்கவும், ஸ்தாயி ஸமிதியின் கூட்டம், விஷயம், காலம், இடம்—எல்லாவற்றையும் வைத்ய சந்த்ரிகை மூலமாகவே பொதுக் கார்யதரிசியால் அறிவிக்கப் படலாம். இந்த அறிக்கை பூரண அவகாசத்துடன் வெளியிடப் பட்டிருந்தால் ப்ரத்யேகமாக நிர்வாகசபை காரியக்கமிட்டி அங்கத்தினருக்கு அனுப்பப்படாமலுமிருக்கலாம்.

21. நிர்வாக ஸபையின் ஸாதாரணக் கூட்டத்துக்குக் குறைந்தது பத்து அங்கத்தினர்களும், அவஸரக் கூட்டத்துக்குக் குறைந்தது ஐந்து அங்கத்தினர்களும் ஆஜராயிருக்க வேண்டும். நேரில் வராமல் அபிப்பிராயத்தை

எழுத்து மூலமாகவும் அனுப்பலாம். இதை நேரில் ஆஜரானதாக எண்ணப்படலாம்.

22. ஒரு கூட்டத்துக்கும் ஆஜராகாமலும், அபிப்பிராயங்கூட தெரிவிக்காமலிருக்கும் அங்கத்தினர் மறு வருஷமும் நிர்வாக சபையில் ஸாதாரணமாக சேர்க்கப்படமாட்டார்.

23. நிர்வாக சபைக் கூட்டம் ஸாதாரணமாக மண்டல கார்யாலயம் இருக்குமிடத்தில்தான் கூட்டப்படும். ஸௌகர்யத்தை உத்தேசித்து ஜில்லாக் கிளைச் சங்கங்கள் இருக்குமிடத்திலும் இதர இடத்திலும் கூட்டப்படலாம்.

24. நிர்வாஹ ஸபையின் 9 அங்கத்தினர்கள் கையெழுத்திட்டு 20 நாட்களுக்குக் குறையாமல் அவகாசம் கொடுத்து நிர்வாக சபையைக் கூட்டும்படி பொதுக்கார்யதர்சிக்கு கோரிக்கை அனுப்பப்பெறின் பொதுக் கார்யதர்சி கூட்டத்தை நடத்தவேண்டும். ஆனல் அக்கூட்டத்தின் கார்யங்களுக்கு கூட்டம் நடத்தக் கேட்டவர்களே பொறுப்பாளிகளாவர்.

25. வார்ஷிக மஹாஸம்மேளனத்துக்கு முன்னதாக ஒரு நிர்வாக சபைக்கூட்டம் நடத்தி வரவு செலவு கணக்குகளையும் ஆண்டறிக்கையையும் தயார் செய்து, ஸம்மேளன சமயம் ஸமர்ப்பிக்கப் படவேண்டும். அவசியமாயின் வரவு செலவு கணக்கை ரிஜிஸ்டர்டு அக்கவுண்டெண்டால் தணிக்கை செய்யப் படலாம்.

26. அங்கத்தினர்களெல்லோரும் மண்டலத்தின் எல்லாக் கார்யங்களிலும் பூர்ணமாக ஒத்துழைக்கவேண்டியது அவசியமாகும்,

27. தலைவர்: நிர்வாஹ ஸபைக்கும், பொதுக் கார்யதர்சிக்கும் பத்திரிகா நிர்வாஹ ஸமிதிக்கும் ஸகலகார்யங்களிலும் ஆலோசனையளிப்பது; எல்லாக்கார்யங்களிலும் நேரிலோ, எழுத்து மூலமோ, பிரதிநிதி மூலமோ, உபதலைவர் மூலமோ கவனித்துக்கொள்வது.

28. பொதுக்காரியதரிசி: மண்டல காரியங்களை நேரில் நடத்தல், நிர்வாக சபை அங்கத்தினருக்குக் காரியங்களைப் பகிர்ந்தளித்தல், கிளைச்சங்கங்கள் அமைத்தல், ஸம்மேளனத்தில் நிறைவேற்றப் படும் தீர்மானங்களை அமுல் நடத்தல், சபை கூட்டுதல், பொக்கிஷதாருடன் கணக்கு வரவு செலவுகளைத் தயாரித்து ஆண்டறிக்கையை ஸம்மேளனத்தில் சமர்ப்பித்தல், மறு வருஷத்தில் வரவு செலவுத் திட்டம் வகுத்தல், அங்கத்தினர்கள் சேர்த்தல், ரசீது மூலம் சந்தா வசூலித்தல், நிதி திரட்டல், பத்திரிகா நிர்வாஹ ஸமிதியுடன் கலந்து கொண்டு பத்திரிகா நிர்வாகத்தையும் நடத்தல், பத்திரிகா நிர்வாஹ ஸமிதிக் கூட்டத்தைக் கூட்டுதல், அதன் நடவடிக்கைகளைக் குறிப்பெடுத்துக் காரியங்களைச்செய்தல் முதலியவை.

29. பொதுக்கார்யதர்சி நடைமுதல் செலவுக்கு ரூபாய் 50 வரை கையில் வைத்துக்கொள்ளலாம்.

30. உபகார்யதரிசிகள்: பொதுக் கார்யதர்சிக்கு எல்லா விஷயங்களிலும் உதவி புரிதல். அவரில்லாத சமயம் அவர் கார்யங்களையும் கவனித்தல்.

31. கிளைச்சங்கக் காரியதரிசிகள்; பிரதி மாதமும் சபை கூட்டி வைத்யக் கூட்டங்கள் நடத்தியும், ஆயுர்வேத பிரசாரம் செய்தும் அப்போதைக் கப்போது மஹாமண்டலத்துக்கு அறிவித்தல்; மஹாமண்டலம் தெரிவிக்கும் கார்யங்களையும் நிறைவேற்றல்.

32. பொக்கிஷதார்: பொதுக் கார்யதர்சிக்கு அங்கத்தினர் சேர்த்தல், சந்தா வசூலித்தல், நிதி திரட்டல் முதலிய கார்யங்களில் உதவிபுரிதல்; பொதுக் கார்யதர்சி கொடுக்கும் தொகைக்கு ரசீது கொடுத்து பாங்கில் போடுதல், செலவுக்குக் கொடுத்தல், காரியதரிசியின் அனுமதியின் மேல் கொடுக்க வேண்டியவர்களுக்கு செக் மூலம் தொகை அளித்தல், வரவு செலவு கணக்குகளை சரியாக வைத்துக்கொண்டு ஸம்மேளனத்தில் கணக்கு ஸமர்ப்பித்தல்.

வார்ஷிக மஹாஸம்மேளனம்.

33. வருஷம் ஒருமுறை முன் ஸம்மேளனத்தில் தீர்மானிக்கப்படுமிடத்தில் ஸம்மேளனம் நடைபெறவேண்டும். விசேஷ அவசர மேற்படின் வருஷமத்தியில் அவசர மஹாநாடு நடத்தப்படலாம். இதற்குப் புதிய தலைவர் தேர்தல் முதலியன கிடையாது.

34. வார்ஷிக ஸம்மேளனத்தில், சாஸ்த்ர சர்ச்சைகள், வித்வத் ஸதஸ், ஆராய்ச்சிகளின் அரங்கேற்றம், ஔஷதங்களின் கண்காக்ஷிகள், வித்வான்களுக்கு கௌரவமளித்தல், மறு வருஷ கார்யங்களைத் தீர்மானித்தல், விதிமாற்றங்கள், நிர்வாக சபை அமைத்தல் இது முதலிய கார்யங்கள் செய்யப்படவேண்டும்.

35. வார்ஷிக ஸம்மேளன கார்யங்களை மண்டலம் வரவேற்புச் சங்கத்துடன் ஆலோசித்துச் செய்ய வேண்டும்.

வரவேற்புச் சங்கம்.

36. வார்ஷிக மஹாஸம்மேளனத்தை நடத்த மண்டலத்தின் அனுமதி பெற்று ஸம்மேளனத்துக்கு இரண்டு மாதங்களுக்கு முன் தகுந்த வரவேற்புச் சங்கம் நிறுவப்படவேண்டும். ஸம்மேளனத்துக்காக நடந்து கொண்டிருக்கும் கார்யங்களின் முன்னேற்றம் அப்போதைக்கப்போது பொதுக் காரியதரிசிக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

37. ஸம்மேளனத்துக்கு வரும் பிரதிநிதிகளிடமிருந்தும் காக்ஷி சாலை அமைப்பவர்களிடமிருந்தும் கட்டணம் வசூலிக்க உரிமையுண்டு. ஸம்மேளனத்துக்கு வருபவர்களுக்கு இட வசதி போஜனம் முதலிய சகல சௌகர்யங்களையும் செய்து கொடுக்கவேண்டும். தலைவரின் பிரசங்கத்தை தேவையான காபிகள் அச்சிட்டு வழங்கவேண்டும். தலைவருக்கு அவசியமாயின் வழிப்பயணச் செலவும் கொடுக்க வேண்டும். ஸம்மேளனத்தின் விஷயங்களை அச்சடித்து பிரகாசம் செய்தல் வேண்டும்.

38. ஸம்மேளனத்துக்கு வசூலித்த தொகையில் செல வுபோக மீதமுள்ள தொகையை மண்டலத்துக்கு அளித்து விடவேண்டும். செலவுக்குப் பற்றுமலிருந்தால் மண்டலத் திலிருந்து பொருள் உதவி செய்யப்பட மாட்டாது.

விஷயாலோசனை ஸபை.

39. ஒவ்வொரு ஸம்மேளனத்திலும் தீர்மானங்களை ஆலோசிக்கவும், கண்காக்ஷி முதலியவைகளைப் பரீக்ஷித்து அபிப்பிராயம் கூறவும் ஸம்மேளன ஸமயத்தில் தனியாக அங்கு கூடியிருப்பவர்களில் பொறுக்கி ஒரு சபையை அமைக்கவேண்டும். இச்சபையில் எல்லா விஷயங்களும், தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டு மஹாஸம்மேளனத் தில் நிறைவேற்றப் பட வேண்டும். இச்சபையில் இடம் பெருத விஷயங்கள் ஸம்மேளனத்தில் இடம் பெருது.

40. பிரதிநிதிகள் கொண்டுவரும் தீர்மானங்கள் எல் லாம் இச்சபை முன் கொண்டு வருவதற்கு எழுத்து மூல மாக முன்னதாகவே பொதுக் கார்யதரிசியிடமோ தலைவ ரிடமோ அளிக்கப்பட வேண்டும்.

விதிமாற்றங்கள்.

41. மஹாமண்டல விதிகளில் மாறுதல் செய்யப்பட வேண்டுமானுல் மஹா ஸம்மேளனத்தில் தான் செய்யப்பட வேண்டும். அவ்விதம் செய்யவேண்டிய மாறுதல்கள் ஸம்மேளனத்துக்கு ஒரு மாதம் முன்னதாகவே நிர்வாக சபையினருக்கு அறிவிக்கப்பட வேண்டும். நிர்வாஹ ஸமிதி அத்திருத்தங்களைப் பரிசீலித்துத் தனது சம்மதத் துடன் வைத்பசந்திரிகை மூலமாகவோ தனியாகவோ மஹாஸம்மேளனம் நடக்கும் முன்பே அங்கத்தினர்களுக் குத் தெரியப்படுத்த வேண்டும்.

பத்திரிகா நிர்வாஹஸமிதி—பத்திரிகை.

42. மஹாமண்டலத்தின் சார்பில் அதன் கொள்கை களையும் நடவடிக்கைகளையும் பொதுமக்கள் அங்கத்தினர் களிடையே நன்கு பிரசாரம் செய்யும் நோக்கத்துடன் மஹா

மண்டலப் பத்திரிகை 'வைத்திய சந்திரிகை' என்ற பெயருடன் வெளியிடப்படுகின்றது. இதில் மஹா மண்டல சம்பந்தமான பிரசாரத்துடன ராஜீயவிஷயமான மஹா மண்டல அபிப்ராயங்கள், சாஸ்திரீயமான வியாஸங்கள், ஆராய்ச்சிகள், சர்ச்சைகள், கேள்வி- ஸமாதானங்கள், பொதுஜனங்களுக்கு உபயோகமான ஆரோக்கியவியாதித் தடுப்புக்குறிப்புகள் முதலியவை இடம் பெறும்.

43. பாஷை: முக்கியமாகத் தமிழும் அவசியத்திற்கும் உசிதத்திற்கும் ஏற்றவாறு ஸம்ஸ்கிருதமும் ஆங்கிலமுமாகும்.

44. நிர்வாஹம்: இதன் நிர்வாஹம் ஆசிரியர், உதவி ஆசிரியர், பிரசுரிப்பவர், மஹாமண்டலத்தலைவர், பொதுக் காரியதர்சி, பொக்கிஷதார், இதர அங்கத்தினர்கள் ஆக பதினொரு பெயர்களடங்கிய ஒரு விசேஷ நிர்வாஹ ஸமிதியிடம் ஒப்படைக்கப்படும். இந்த ஸமிதி அங்கத்தினர் யாவரும் வைத்யரே.

45. ஆசிரியர்: மஹாமண்டல லக்ஷ்யங்களுக்கு விரோதமில்லாமல் மஹாமண்டலத்தின் கொள்கைகளையும், கார்யங்களையும் நன்கு பிரசாரமடையுமாறு வெளியிடுதல், பத்திரிகையில் விஷயங்களை நன்கு பரிசீலித்துப் பூர்ணப் பொறுப்புடன் வெளியிட அனுமதிப்பது, பத்திரிகாநிர்வாஹஸமிதியின் ஆலோசனைகளை ஏற்றுப் பத்திரிகையை நடத்தல், உதவி ஆசிரியர், பிரசுரிப்பவரின் உதவியைக் கொண்டு பத்திரிகைப் பிரசுரத்தைக் கவனித்தல்.

46. உதவி ஆசிரியர்: பத்திரிகாநிர்வாஹ விஷயத்தில் ஆசிரியருக்குப் பூர்ண உதவி அளித்தல்.

47. பிரசுரிப்பவர்: பத்திரிகையின் பிரசுரகர்த்தாவாகத் தன்னைப் பதிவுசெய்து கொள்ளுதல், மஹாமண்டல அங்கத்தினர்கள், வைத்தியசந்திரிகை சந்தாதாரர்கள், மற்றும் நிர்வாஹ ஸமிதி மாற்றுக்காபியாகவோ, இலவசமாகவோ, அனுப்பவேண்டியதாகக் கருதும் ஆயுர்வேதாபிமானிகள் இவர்களின் விலாஸக்குறிப்பு

தயாரித்து அவர்களுக்குப் பத்திரிகை அனுப்ப ஏற்பாடு செய்தல்.

48. பத்திரிகா நிர்வாஹ ஸமிதி அங்கத்தினர்கள் மஹாமண்டல நிர்வாஹ ஸமிதி அங்கத்தினர்களாகவுமிருக்கலாம். இந் நிர்வாஹ ஸமிதியினரின் ஆலோசனைப் பிரகாரமே பத்திரிகை நடத்தப்படவேண்டும். இந்த நிர்வாஹ ஸமிதி அங்கத்தினர்களின் ஸ்தானம் நடுவே பூர்த்திசெய்யப்பட வேண்டிவந்தால் அந்த ஸமிதியார் தானே பூர்த்தி செய்துகொள்ளலாம். பத்திரிகை சம்பந்தப்பட்ட விளம்பரம், சந்தா, இலவசமாக அனுப்புவது, மாற்றுப்பிரதி அனுப்புவது, அச்சாபீஸுடன் சம்பந்தம் முதலிய நிர்வாஹகாரியங்களில் தேவைக்கேற்ப நியமங்களை இச்சமிதியே ஏற்படுத்திக்கொள்ளும்.

49. இச்சமிதி அங்கத்தினர் யாவரும் ஸம்மேளன சமயத்தில் பிரதி வருஷமும் தேர்ந்தெடுக்கப்படுவர்களாயினும், ஆசிரியர், உதவி ஆசிரியர், பிரசுரிப்பவர் இம் மூவரையும் பத்திரிகா நிர்வாஹ ஸௌகர்யத்தை உத்தேசித்து அவசியமின்றி மாற்றக்கூடாது.

KALIA BROTHERS

(REGD.)

MUSK & INDIAN DRUG MERCHANTS,

JULLUNDUR CITY, PUNJAB.

For Pure Musk, Saffron, Shilajit, Gorochanam, Real Pearls, Vamsa lochan, Ashtavargam, Pachakarpuram, Gold & Silver Leaves, Athivisha & All kinds of Himalayan Herbs and Drugs •

Price list & Catalogue Free on application.

We were awarded a Gold Medal Certificate for

MUSK & SAFFRON

by 39th All India Ayurvedic Congress,

KOTTAKKAL, MALABAR.

கலியா பிரதர்ஸ்

(ரிஜிஸ்டர்டு)

கஸ்தூரி, இந்தியமருந்து சரக்கு வியாபாரிகள்,

ஜலந்தர்ஸிடி, பஞ்சாப். (இந்தியா)

சுத்தமான உயர்ந்த ரக கஸ்தூரி, குங்குமப்பூ, ஷிலாஜத், கோரோசனம், நல்முத்து, வம்சலோசன (மூங்கிலுப்பு), அஷ்டவர்கம், பச்சைக்கர்பூரம், தங்க வெள்ளி இலைகள், அதிவிடயம் மற்றும் நல்ல ஹிமாலய மருந்துச் சரக்குகள் எம்மிடம் கிடைக்கும்.

எங்கள் கஸ்தூரியும் குங்குமப்பூவும்

39-வது அகில இந்திய ஆயுர்வேத மஹாஸம்மேளனத்தில்

(கோட்டக்கல், மலபார்.)

தங்கமெடல் அத்தாக்ஷிப்பத்திரம் பெற்றவை.

கேட்லாக் விலை விபரத்திற்கு எழுதவும்.

KALIA BROS, *Musk Merchants,*

JULLUNDER CITY. (Punjab.)